# ஸௌந்தர்ய லஹரி

### 1. *சர்வ விக்ன நாசம்*

शिवःशक्त्यायुक्तोयदिभवतिशक्तःप्रभवितुं

नचेदेवंदेवोनखलुकुशलःस्पन्दितुमपि|

अतस्त्वामाराध्यांहरिहरविरिञ्चादिभिरपि

प्रणन्तुंस्तोतुंवाकथमकृतपुण्यःप्रभवति||१||

*சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்*

*ந சேதேவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திதுமபி|*

*அதஸ்த்வாம் ஆராத்யாம் ஹரி-ஹர-விரின்சாதிபி ரபி*

*ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத-மக்ருத புண்ய: ப்ரபவதி|| 1 ||*

*சகல உலகங்களையும் படைக்கும் ஈசன், சக்தியாகிய உன்னுடன் இணைந்தால்தான் இந்த உலகத்தை படைக்க முடியும்.சக்தி இல்லாமல் சிவனால் செயல்படமுடியாது . மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு,பிரம்மா ஆகியோர் துதிக்கின்ற உன்னை முன் ஜென்ம புண்ணியம் இல்லாவிட்டால் துதிக்கவும், வணங்கவும் முடியுமோ ?*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*12 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து ஹவிஸ் நிவேதனம் செய்ய வேண்டும். செய்தால் சர்வ விக்ன நாச மூலம் நினைத்த காரியங்களும் சித்திக்கும்.*

**2. சர்வ லோக வச்யம் மற்றும் மோஹனம்**

तनीयांसंपांसुंतवचरणपङ्केरुहभवं

विरिञ्चिस्सञ्चिन्वन्विरचयतिलोकानविकलम्|

वहत्येनंशौरिःकथमपिसहस्रेणशिरसां

हरस्संक्षुद्यैनंभजतिभसितोद्धूलनविधिम्||२||

தனீயாம்ஸூம் பாம்ஸூம் தவ சரண பங்கேருஹ-பவம்

விரிம்சி: ஸம்சின்வன் விரசயதி லோகா-னவிகலம் |

வஹத்யேனம் சௌரி: கதமபி ஸஹஸ்ரேண சிரஸாம்

ஹர: ஸம்க்ஷூத்-யைனம் பஜதி பஸிதோத்தூள னவிதிம்|| 2||

உன்னுடைய பாத தூளியைச் சேர்த்து , பிரம்மா , இந்த உலகைப் படைக்கிறார் . ஆயிரம் தலை உடைய ஆதிசேஷனான திருமால் , அந்த பாத தூளியான சகல உலகத்தையும் தாங்குகிறார் . சிவனானவர் இந்த பாததூளியை விபூதியாக உடல் முழுவதும் பூசிக்கொள்கிறார்.

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

55நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து பால் பாயசம் நிவேதனம் செய்வதால்சர்வ லோக வச்யம் மற்றும் மோஹனம் ஏற்படும்.

### 3. சகல வித்யா ப்ராப்தி

अविद्यानामन्त-स्तिमिर-मिहिरद्वीपनगरी

जडानांचैतन्य-स्तबक-मकरन्द-स्रुतिझरी|

दरिद्राणांचिन्तामणिगुणनिकाजन्मजलधौ

निमग्नानांदंष्ट्रामुररिपु-वराहस्यभवति||३||

அவித்யானா-மன்த-ஸ்திமிர-மி:ர த்வீபனகரீ

ஜடானாம் சைதன்ய-ஸ்தபக மகரன்த ச்ருதிஜரீ |

தரித்ராணாம் சின்தாமணி குணனிகா ஜன்மஜலதெள

னிமக்னானாம் தம்ஷ்ட்ரா முரரிபு வராஹஸ்ய பவதி|| 3 ||

அம்மா ! உன்னுடைய பாத தூளி யானது, இருளை அகற்றும் சூரியன் போல் ,அறியாமை என்னும் இருள் அகற்றி , ஞானனத்தை நல்கும் . ஏழைக்கு துயர் துடைக்கும் சிந்தாமணி போன்றது. பிரளய காலத்தில், திருமால் வராக அவதாரம் எடுத்து , எப்படி இந்த உலகை கப்பாற்றி னாரோ, அதுபோல் பிறவிக்கடலைக் கடக்க அபயம் தரக்கூடியது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45நாட்களுக்கு தினமும் 2000 முறை பாராயணம் செய்து உளுந்து வடை நிவேதனம் செய்வதால்சகல வித்யா ப்ராப்தி மற்றும் மோஹனம் ஏற்படும்.

### 4. சகல பய நிவ்ருத்தி

त्वदन्यःपाणिभ्यामभयवरदोदैवतगणः

त्वमेकानैवासिप्रकटितवराभीत्यभिनया|

भयात्त्रातुंदातुंफलमपिचवाञ्छासमधिकं

शरण्येलोकानांतवहिचरणावेवनिपुणौ||४||

த்வதன்ய: பாணிபயா-மபயவரதோ தைவதகண:

த்வமேகா னைவாஸி ப்ரகடித-வரபீத்யபினயா |

பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாம்சாஸமதிகம்

சரண்யே லோகானாம் தவ : சரணாவேவ நிபுணௌ || 4 ||

தாயே ! மற்ற தேவர்களும்,தெய்வங்களும், அபயவர பிரதானத்தைதங்கள் அபிநய முத்திரைகளால் காட்ட, நீ மட்டும் அபிநயம் காட்டுவதில்லை. ஏனென்றால், இந்த அபயவர பிரதானத்தை விட அதிகமாக, வேண்டிய வரங்களைக் கொடுப்பதற்கு உன் பாத தாமரை போதுமே.

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

36நாட்களுக்கு தினமும் 3000 முறை பாராயணம் செய்து எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்வதால்சகல பய, ரோக நிவ்ருத்தி மற்றும் சாம்ராஜ்ய ப்ராப்தி கிடைக்கும்.

**5. ஸ்திரீ புருஷ வச்யம்**

हरिस्त्वामाराध्यप्रणतजनसौभाग्यजननीं

पुरानारीभूत्वापुररिपुमपिक्षोभमनयत्|

स्मरोऽपित्वांनत्वारतिनयनलेह्येनवपुषा

मुनीनामप्यन्तःप्रभवतिहिमोहायमहताम्||५||

*ஹரிஸ்த்வாமாரத்ய ப்ரணத-ஜன-ஸௌபாக்ய-ஜனனீம்*

*புரா நாரீ பூத்வா புரரிபுமபி க்ஷோப மனயத் |*

*ஸ்மரோபித்வாம்னத்வா ரதினயன-லேஹ்யேனவபுஷா*

*முனீனாமப்யன்த: ப்ரபவதி : மோஹாய மஹதாம் || 5 ||*

*சகல நமைகளைத் தரும் தேவீ ! மகாவிஷ்ணு, உன்னை வணங்கி , அழகான பெண் உருவம் கொண்டு ,சிவனை மோகம் கொள்ளச் செய்கிறார். மன்மதன் உன் பாத கமலத்தை வணங்கி, மூஉலக அழகனாகி, முற்றும் துறந்த முனிவர்களின் மனதில், மோகத்தை உண்டுபண்ணுகிறான்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*8நாட்களுக்கு தினமும் 2000 முறை பாராயணம் செய்து பருப்பு பொங்கல்நிவேதனம் செய்வதால்சகல ஸ்திரீ புருஷ வச்யம் மற்றும் ஜன மோகனம் அடையலாம்.*

**6. புத்திர சந்தானம்**

धनुःपौष्पंमौर्वीमधुकरमयीपञ्चविशिखाः

वसन्तःसामन्तोमलयमरुदायोधनरथः|

तथाप्येकःसर्वहिमगिरिसुतेकामपिकृपाम्

अपाङ्गात्तेलब्ध्वाजगदिद-मनङ्गोविजयते||६||

தனு: பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விசிகா:

வஸந்த: ஸாமந்தோ மலயமரு-தாயோதன-ரத:|

ததாப்யேக: ஸர்வம் :மகிரிஸுதே காமபி க்ருபாம்

அபாம்காத்தே லப்த்வா ஜகதித-மனங்கோ விஜயதே || 6 ||

மன்மதனுடைய வில் மலர்களால் ஆனது. நாண் வண்டுகளின் வரிசை. பாணங்கள் மலர்களே. அமைச்சன் இளவேனிற்காலம். தேரோ தென்றல் காற்று. இவைகளோடு கூடிய உருவமற்ற மன்மதன் உன் அருளினால் இந்த உலகத்தையே ஜெயிக்கின்றான்.

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

21நாட்களுக்கு தினமும் 500 முறை பாராயணம் செய்து கரும்புநிவேதனம் செய்வதால்நபும்சகனாக இருந்தாலும் குழந்தை பிறக்கும்.

**7. ராஜ வச்யம் , சத்ரு வச்யம்**

क्वणत्काञ्चीदामाकरिकलभकुम्भस्तननता

परिक्षीणामध्येपरिणतशरच्चन्द्रवदना|

धनुर्बाणान्पाशंसृणिमपिदधानाकरतलैः

पुरस्तादास्तांनःपुरमथितुराहोपुरुषिका||७||

*க்வணத்காஞ்சீ-தாமா கரி கலப கும்ப-ஸ்தனனதா*

*பரிக்ஷீணா மத்யே பரிணத சரச்சன்த்ர-வதனா |*

*தனுர்பாணான் பாசம் ஸ்ருணிமபி ததானா கரதலை:*

*புரஸ்தா தாஸ்தாம் ந : புரமதிது ராஹோ-புருஷிகா || 7 ||*

*முழுநிலவு போன்று மலர்ந்த முகத்துடனும் , இடையிலே ஒட்டியாண சலங்கை ஓசையுடனும், யானையின் கும்பத்தைப் போன்று ஸ்தனபாரத்துடனும் , கைகளில் கரும்புவில், மலர்பானம், பாசக்கயிறு, ஈட்டிகரங்களுடன் அலங்காரமாகத் தோன்றும் அன்னையே ! எங்களுக்கு காட்சி தருவாயாக !*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*12 நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து பாயசம் மற்றும் அன்னம்நிவேதனம் செய்வதால்ராஜ வச்யம், மற்றும் சத்ரு வச்யம் ஏற்படும்.*

**8. காராக்ராஹ, பந்த நிவ்ருத்தி**

सुधासिन्धोर्मध्येसुरविटपिवाटीपरिवृते

मणिद्वीपेनीपोपवनवतिचिन्तामणिगृहे|

शिवाकारेमञ्चेपरमशिवपर्यङ्कनिलयां

भजन्तित्वांधन्याःकतिचनचिदानन्दलहरीम्||८||

ஸுதாஸின்தோர்மத்யே ஸுரவிட-பிவாடீ-பரிவ்ருதே

மணித்வீபே நீபோ-பவனவதி சின்தாமணி க்ருஹே |

சிவாகாரே மஞ்சே பரமசிவ-பர்யங்க நிலயாம்

பஜன்தி த்வாம் தன்யா: கதிசன சிதானன்த-லஹரீம் || 8 ||

அமிர்தகடலின் மத்தியில் , கடம்பவன காடுகளால் சூழப்பட்டு , சிந்தாமணி என்னும் ஒருவகை ரத்தினத்தால் நிர்மாணிக்கப்பட்ட மணித்வீபம் என்னும் அரண்மனையில் அந்தப்புரத்தில் பரமசிவனுடைய மடியில், ஆனந்த சல்லாபத்துடன் சயனித்திருக்கும் அன்னையே ! உன்னை வணங்குபவர்களே உயர்ந்தவர்கள் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

12நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து மிளகு அன்னம் மற்றும் பாயசம்நிவேதனம் செய்வதால்காரக்ரஹ வாச நிவ்ருத்தி, பந்த நிவ்ருத்தி மற்றும் நினைத்த கார்ய சித்தி ஏற்படும்.

**9. வெளிநாடு சென்றவர் திரும்பி வர**

महींमूलाधारेकमपिमणिपूरेहुतवहं

स्थितंस्वाधिष्ठानेहृदिमरुतमाकाशमुपरि|

मनोऽपिभ्रूमध्येसकलमपिभित्वाकुलपथं

सहस्रारेपद्मेसहरहसिपत्याविहरसे||९||

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்

ஸ்திதம் ஸ்வதிஷ்டானே ஹ்ருதி மருத-மாகாச-முபரி |

மனோSபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்

ஸஹஸ்ராரே பத்மே ஸ ஹரஹஸி பத்யா விஹரஸே || 9 ||

மூலாதார ( பூமி ), ஸ்வாதிஷ்டான ( அக்னி ), மணிபூரக (நீர் ) , அனாகத ( வாயு ), விசுத்தி (ஆகாயம்) என்ற பஞ்ச பூதத்தையும் , ப்ருத்வி மனோமாயா , சுத்தவித்யா , மகேஸ்வர, சதாசிவ தத்வம் என்னும் நால்வகை தத்வங்களையும் தாண்டி சந்திர மண்டலத்தில் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரையில் சதாசிவனுடன் கூடி அன்னை மகிழ்கின்றாள் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து பால் பாயசம்நிவேதனம் செய்தால்தேசாந்தரம் சென்றவர் திரும்பி வருவார்.(சென்ற திசையை நோக்கி ஜபம் செய்யவும்)

10. **வீர்ய வ்ருத்தி முதலியன**

सुधाधारासारैश्चरणयुगलान्तर्विगलितैः

प्रपञ्चंसिञ्चन्तीपुनरपिरसाम्नायमहसः|

अवाप्यस्वांभूमिंभुजगनिभमध्युष्टवलयं

स्वमात्मानंकृत्वास्वपिषिकुलकुण्डेकुहरिणि||१०||

ஸுதாதாராஸாரை: சரணயுகலான்தர்விகலிதை:

ப்ரபம்சம் ஸின்ஞ்ன்தீ புனரபி ரஸாம்னாய-மஹஸ:|

அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகனிப-மத்யுஷ்ட-வலயம்

ஸ்வமாத்மானம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி || 10 ||

சந்திர மண்டலத்திலிருக்கும் அன்னையின் திருவடிகளிலிருந்து பெருகும் அமிர்த வெள்ளமானது , இந்த உலகமாகிய உடலின் நாடிகளை நனைக்கிறது . பிறகு சந்திர மண்டலத்திலிருந்து ஒரு சர்பமாகத் தன்னைச் சுற்றிக்கொண்டு , தன்னுடைய ஆதாரமான மூலாதார சக்கரத்தில் கண்ணுக்குத் தெரியாமல் அன்னை யோகநித்திரை செய்கிறாள்.

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

6நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து பழம்நிவேதனம் செய்தால்ஆண்களுக்கு வீர்ய வ்ருத்தி, பெண்கள் உரிய வயதில் ராஜச்வலா அடைதல் ஆகிய பலன்கள் கிடைக்கும்.

## 11. குழந்தை பாக்கியம்

चतुर्भिःश्रीकण्ठैःशिवयुवतिभिःपञ्चभिरपि

प्रभिन्नाभिःशम्भोर्नवभिरपिमूलप्रकृतिभिः|

चतुश्चत्वारिंशद्वसुदलकलाश्रत्रिवलय-

त्रिरेखाभिःसार्धतवशरणकोणाःपरिणताः||११||

*சதுர்பி: ஸ்ரீகண்டை: சிவயுவதிபி: பஞ்சபிபி*

*ப்ரபின்னாபி: சம்போர்னவபிரபி மூலப்ரக்றருதிபி: |*

*சது: சத்வாரிம்சத்-வஸுதல-கலாசர த்ரிவலய-*

*த்ரிரேகபி: ஸார்தம் தவ சரணகோணா: பரிணதா: || 11 ||*

*சிவச் சக்கரங்கள் 4 , சக்திச் சக்கரங்கள் 5 , இந்த மூலச் சக்கரங்களான 9 சக்கரங்களோடு, அஷ்டதள ( 8 ) , சோடசதள( 16), த்ரிவலய ( 3 சுற்று ), த்ரீ ரேகைகளோடு ( 3கோடுகள் ) கூடிய உன் இருப்பிடம் , நாற்பத்தி நான்கு கோணங்கள் கொண்ட உன்ஸ்ரீ சக்கரமாக விளங்குகிறது.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*8நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து வெல்ல பாயசம் மற்றும் மஹா நைவேத்யம் செய்தால் புத்ரோத்பதி ஏற்படும்.*

**12. பேச்சு குறைகள் நீங்க**

त्वदीयंसौन्दर्यंतुहिनगिरिकन्येतुलयितुं

कवीन्द्राःकल्पन्तेकथमपिविरिञ्चिप्रभृतयः|

यदालोकौत्सुक्यादमरललनायान्तिमनसा

तपोभिर्दुष्प्रापामपिगिरिशसायुज्यपदवीम्||१२||

த்வதீயம் ஸௌன்தர்யம் து:னகிரிகன்யே துலயிதும்

கவீன்த்ரா: கல்பன்தே கதமபி விரிஞ்சி-ப்ரப்ருதய: |

யதாலோகௌத்ஸுக்யா-தமரலலனா யான்தி மனஸா

தபோபிர்துஷ்ப்ராபாமபி கிரிச-ஸாயுஜ்ய-பதவீம் || 12 |

தேவீ ! உன் மேனியின் அழகினைப் பார்த்து , ரம்பை , ஊர்வசி போன்ற தேவலோக மங்கையரும் கூட, ஆசைப்படுகிறார்கள் . படைக்கும் கடவுள் பிரம்மாவினால் கூட உன்னுடைய பேரழகை வருணிக்க முடியவில்லை . அந்த பேரழகை பரமசிவனால் மட்டுமே அனுபவிக்க முடியும் . எனவே பரம தபஸ் விகளால் கூட அடைய முடியாத அந்த சிவசாயுஜ்ய பதவியை , தேவலோகப் பெண்கள் மனதால் அடைய விரும்புகிறார்கள் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன்நைவேத்யம் செய்தால் ஊமையும் பேசுவார் .

## 13. ஸ்திரீ வச்யம்

नरंवर्षीयांसंनयनविरसंनर्मसुजडं

तवापाङ्गालोकेपतितमनुधावन्तिशतशः|

गलद्वेणीबन्धाःकुचकलशविस्रस्तसिचया

हठात्त्रुट्यत्काञ्च्योविगलितदुकूलायुवतयः||१३||

*நரம் வர்ஷீயாம்ஸம் நயனவிரஸம் நர்மஸு ஜடம்*

*தவாபாம்காலோகே பதித-மனுதாவந்தி சதச: |*

*கலத்வேணீ பந்தா: குசகலச-விஸ்த்ரிஸ்த-ஸிசயா*

*ஹடாத் த்ருட்யத்காஞ்யோ விகலித-துகூலா யுவதய: || 13 ||*

தாயே ! ஒருவன் எவ்வளவு வயதானவனாக இருந்தாலும் , அழகில்லாமல் உடல் பலம் அற்றவனாக இருந்தாலும் , காமரச சல்லாபம் தெரியாதவனாக இருந்தாலும் , உன் பார்வை அவன் மீது பட்டால், இளவயது மங்கையரும் கூட ,கூந்தல் அவிழ , மேலாடை நழுவ , இடையினில் ஒட்டியாணம் தெறிக்க, தன்னை மறந்து அவன் மீது மோஹம் கொண்டு , அவனை மன்மதன் என்று எண்ணி அவனைத் தொடர்வார்கள் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

6நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து த்ரிமதுரம் அல்லது அன்னம்நைவேத்யம் செய்தால் ஸ்திரீ வச்யம் ஏற்படும்.

**14. க்ஷாம க்ஷோப நிவர்த்தி**

क्षितौषट्पञ्चाशद्द्विसमधिकपञ्चाशदुदके

हुताशेद्वाषष्टिश्चतुरधिकपञ्चाशदनिले|

दिविद्विषट्त्रिंशन्मनसिचचतुष्षष्टिरितिये

मयूखास्तेषामप्युपरितवपादाम्बुजयुगम्||१४||

க்ஷிதௌ ஷட்பஞ்சாசத்-த்விஸமதிக-பஞ்சாச-துதகே

ஹுதாசே த்வாஷஷ்டி: சதுரதிக-பஞ்சாஷ-தனிலே |

திவி த்வி: ஷட் த்ரிம்சன் மனஸி ச சது:ஷஷ்டிரிதி யே

மயூகா-ஸ்தேஷா-மப்யுபரி தவ பாதாம்புஜ-யுகம் || 14 ||

தாயே ! உன்னுடைய பாத கமலம் ஆதார சக்கரங்களான மூலாதாரத்தில் 56 ( பூமி ), மணிபூரகத்தில் 52 ( நீர் ) , சுவாதிஷ்டானத்தில் 62 (அக்னி ), அனாகதத்தில் 54 (வாயு), விசுத்தியில் 72 (ஆகாயம் ), ஆஜ்ஞா சக்கரத்தில் 64 ஆகிய இந்த கிரணக்களுக்கு மேலே ஆயிரம் தள தாமரையில் ஒளிர்கின்றது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்**:

45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து பால் பாயசம்நைவேத்யம் செய்தால் க்ஷாம க்ஷோப நிவர்த்திமற்றும் சூர்ய தாப நிவர்த்திகிடைக்கும்.

**15. வித்பத்தி, கவன சக்தி**

शरज्ज्योत्स्नाशुद्धांशशियुतजटाजूटमकुटां

वरत्रासत्राणस्फटिकघटिकापुस्तककराम्|

सकृन्नत्वानत्वाकथमिवसतांसंन्निदधते

मधुक्षीरद्राक्षामधुरिमधुरीणाःभणितयः||१५||var फणितयः

*சரஜ்ஜ்யோத்ஸ்னா சுத்தாம் சசியுத-ஜடாஜூட-மகுடாம்*

*வர-த்ராஸ-த்ராண-ஸ்படிககுடிகா-புஸ்தக-கராம் |*

*ஸக்றருன்ன த்வா னத்வா கதமிவ ஸதாம் ஸன்னிதததே*

*மது-க்ஷீர-த்ராக்ஷா-மதுரிம-துரீணா: பணிதய: || 15 ||*

*இலையுதிர் காலச் சந்திரனைப் போன்று வெண்மையான உடல் அழகினைக் கொண்டவளும் , சந்திரனை மகுடமாகத் தரித்தவளும் , அபய வரப் பிரதான முத்திரைகளுடன் ,கையில் புத்தகம் , ஸ்படிகமாலை இவைகளை உடையவளுமான உன்னை ஒரு முறையாவது வணங்குகின்ற பக்தனுக்கு , தேன் , பால் , திராட்ஷை இவைகளையும் விட ,மிக இனிமையான வாக்கு பலம் கிடைக்கும் என்பது நிச்சயமே .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன், பழம், மற்றும் சர்க்கரைநைவேத்யம் செய்தால் வித்பத்தி, கவன சக்தி மற்றும் வித்யா லாபம் ஏற்படும்.*

**16. சதுர்வேத வித்யா ப்ரதம் பைசாச நிவ்ருத்தி**

कवीन्द्राणांचेतःकमलवनबालातपरुचिं

भजन्तेयेसन्तःकतिचिदरुणामेवभवतीम्|

विरिञ्चिप्रेयस्यास्तरुणतरशृङ्गारलहरी-

गभीराभिर्वाग्भिर्विदधतिसतांरञ्जनममी||१६||

*கவீன்த்ராணாம் சேத: கமலவன-பாலாதப-ருசிம்*

*பஜன்தே யே ஸன்த: கதிசிதருணாமேவ பவதீம் |*

*விரிஞ்சி-ப்ரேயஸ்யா-ஸ்தருணதர-ஸ்ருங்கார லஹரீ-*

*கபீராபிர் வாக்பிர் விதததி ஸதாம் ரஞ்ஜனமமீ || 16 ||*

*கவிகளின் மனமாகிய தாமரை மலரை மலரச் செய்கின்ற , இளஞ் சூரியனைப் போல் செந்நிற மேனி அழகை உடையவளே ! உன்னை வணங்குபவர்களுக்கு , காலத்தைக் கடந்த ஒரு பக்திப் பரவச நிலை ஏற்பட்டு (விழிப்புணர்வு) , அதன் மூலம் சரஸ்வதியின் அருள் பெற்று , தெய்வீகக் கவிகள் படைக்கும் திறமை பெற்று , அதனால் மற்றவர்களையும் மகிழ்விக்கின்றனர்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன்நைவேத்யம் செய்தால் சதுர்வேத வித்யா ப்ரதம், பைசாச நிவ்ருத்தி ஏற்படும்.*

**17. *சகல சாஸ்திர வித்யா ப்ரதம், வர லாபம்***

सवित्रीभिर्वाचांशशिमणिशिलाभङ्गरुचिभिः

वशिन्याद्याभिस्त्वांसहजननिसंचिन्तयतियः|

सकर्ताकाव्यानांभवतिमहतांभङ्गिरुचिभिः

वचोभिर्वाग्देवीवदनकमलामोदमधुरैः||१७||

*ஸவித்ரீபி-ர்வாசாம் சசி-மணி சிலா-பங்க ருசிபி-*

*வசின்யாத்யாபி-ஸ்த்வாம் ஸஹ ஜனனி ஸம்சின்தயதி ய:* |

*ஸ கர்தா காவ்யானாம் பவதி மஹதாம் பங்கிருசிபிர்*

*வசோபிர் வாக்தேவீ-வதன-கமலாமோத மதுரை:* || 17 ||

*சந்திரகாந்தக் கற்கள் போல்,வெண்மையான வசினி முதலாய வாக்தேவதைகளால் சூழப்பட்டவளே ! உன்னை முழு மனதுடன் தியானம் செய்பவனுக்கு , மஹா கவிகளின் வாக்குகள் போல் , சரஸ்வதி தேவியின் இனிமையான வாக்விலாசத்தை உடையவனாய் , மஹா காவியங்கள் படைக்கும் திறமை உடையவனாய் ஆகின்றான்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன்பால், கரும்பு மற்றும் சர்க்கரைநைவேத்யம் செய்தால் சகல சாஸ்திர வித்யா ப்ரதம், வர லாபம் ஏற்படும்.*

**18. ஸ்திரீ வச்யம், வாக் பலிதம்**

तनुच्छायाभिस्तेतरुणतरणिश्रीसरणिभिः

दिवंसर्वामुर्वीमरुणिमनिमग्नांस्मरतियः|

भवन्त्यस्यत्रस्यद्वनहरिणशालीननयनाः

सहोर्वश्यावश्याःकतिकतिनगीर्वाणगणिकाः||१८||

*தனுச்சாயாபிஸ்தே தருண-தரணி-ஸ்ரீஸரணிபிர்*

*திவம் ஸர்வா-முர்வீ-மருணிமனி மக்னாம் ஸ்மரதி ய: |*

*பவன்த்யஸ்ய த்ரஸ்ய-த்வனஹரிண: சாலீன-நயனா:*

*ஸஹோர்வச்யா வச்யா: கதி கதி ந கீர்வாண-கணிகா: || 18 ||*

உதய சூரியன் போல், உன் மேனியிலிருந்து வருகின்ற அழகான சிவந்த கிரணங்களினால், இந்த பூமி, ஆகாயம் முழுவதும் சிவப்பு நிறத்தில் மூழ்கி இருப்பதாக (அருணா தேவீ ரூபம்) தியானம் செய்யும் பக்தர்களிடம் , மருண்ட மான் விழிகளைக் கொண்ட, ரம்பை ஊர்வசி போன்ற தேவலோக பெண்களும் வசப்படுகிறார்கள் . அப்படியிருக்க சாதாரண பெண்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்துபாயசம், பால் மற்றும் தாம்பூலம்நைவேத்யம் செய்தால் ஸ்திரீ வச்யம், வாக் பலிதம் மற்றும் சித்ர வித்யா சித்தி ஆகியவைஏற்படும்.

**19. சகலராஜ, ராக்ஷஸ, ஸ்திரீ, மிருக மோஹனம்**

मुखंबिन्दुंकृत्वाकुचयुगमधस्तस्यतदधो

हरार्धंध्यायेद्योहरमहिषितेमन्मथकलाम्|

ससद्यःसंक्षोभंनयतिवनिताइत्यतिलघु

त्रिलोकीमप्याशुभ्रमयतिरवीन्दुस्तनयुगाम्||१९||

முகம் பின்தும் க்ருத்வா குசயுகமத-ஸ்தஸ்ய தததோ

ஹரார்தம் த்யாயேத்யோ ஹரம:ஷி தே மன்மதகலாம் |

ஸ ஸத்ய: ஸம்க்ஷோபம் நயதி வனிதா இத்யதிலகு

த்ரிலோகீமப்யாசு ப்ரமயதி ரவீன்து-ஸ்தனயுகாம் || 19 ||

சிவனின் துணைவியே ! காமகலா ரூபிணி ! உன் முகத்தை பிந்துஸ் ஸ்தானமாகவும், அதன் கீழ் உன் இரு ஸ்தனங்களையும், அதன் கீழ் சக்தி வடிவத்தையும் , தியானித்து , அதில் மன்மதக் கலையை எவன் துதிக்கிறானோ , அவன் எல்லா பெண்களின் மனத்திலும் காம விகாரத்தை ஏற்படுத்துகிறான் . சூர்ய சந்திரர்களை ஸ்தனங் களாகக் கொண்ட மூஉலகப் பெண்களையும் தன் வசப்படுத்துகிறான் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

25நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன், பால் மற்றும்பாயசம்நைவேத்யம் செய்தால் சகலராஜ, ராக்ஷஸ, ஸ்திரீ, மிருக மோஹனம் மற்றும் ஸ்திரீ ஆகர்ஷணம் ஆகியவைஏற்படும்.

**20. விஷ ஜ்வரம், திருஷ்டி, விஷ நிவ்ருத்தி**

किरन्तीमङ्गेभ्यःकिरणनिकुरम्बामृतरसं

हृदित्वामाधत्तेहिमकरशिलामूर्तिमिवयः|

ससर्पाणांदर्पंशमयतिशकुन्ताधिपइव

ज्वरप्लुष्टान्दृष्ट्यासुखयतिसुधाधारसिरया||२०||

கிரன்தீ-மங்கேப்ய: கிரண-நிகுரும்பம்ருதரஸம்

ஹ்ருதி த்வா மாதத்தே :மகரசிலா-மூர்திமிவ ய: |

ஸ ஸர்பாணாம் தர்பம் சமயதி சகுன்ததிப இவ

ஜ்வரப்லுஷ்டான் த்ருஷ்ட்யா ஸுகயதி ஸுதாதாரஸிரயா || 20 ||

அன்னையே ! சந்திர காந்தக் கற்களினால் செய்யப்பட்டதுபோல் அழகிய உருவம் கொண்டவளே ! உன்னை வணங்கும் அடியார்க்கு , உன் அங்கங்களிலிருந்து பெருகும் அமிர்த மழையினை வாரி வழங்குபவளே ! அதனால் உன் அருள் பெற்றவன் ஆடும் பாம்பிற்கு சாடும் கருடனைப் போலவும் , ஜுரத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு, உன்னால் கிடைக்கப் பெற்ற அமிர்த பார்வையினாலேயே , நிவர்த்தியைத் தருபவனாகவும் இருந்து, அவர்களின் நோயை குணப்படுத்துகிறான் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

25நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்துபால் பாயசம்நைவேத்யம் செய்தால் விஷ ஜ்வரம், திருஷ்டி நாசனம் மற்றும் விஷ நிவ்ருத்திஏற்படும்.

**21. சகல ஜன கோப நிவ்ருத்தி**

तटिल्लेखातन्वींतपनशशिवैश्वानरमयीं

निषण्णांषण्णामप्युपरिकमलानांतवकलाम्|

महापद्माटव्यांमृदितमलमायेनमनसा

महान्तःपश्यन्तोदधतिपरमाह्लादलहरीम्||२१||

*தடில்லேகா-தன்வீம் தபன சசி வைச்வாநர மயீம்*

*நிஷ்ண்ணாம் ஷண்ணாமப்யுபரி கமலானாம் தவ கலாம் |*

*மஹாபத்மாதவ்யாம் ம்ருதித-மலமாயேன மனஸா*

*மஹான்த: பஷ்யன்தோ தததி பரமாஹ்லாத-லஹரீம் || 21 ||*

தாயே ! ஆனந்தவல்லி ! ஆறு ஆதார சக்கரங்களுக்கும் மேலே , தாமரைக்காடு போன்ற ஆயிரம் தளத் தாமரையில், மின்னல் கொடி போன்று, சூர்யா சந்திர அக்னிவடிவம் கொண்டவளே ! உன்னுடைய 'சாதா ' என்ற கலையை காமம், மாயை , அறியாமை விட்ட , ஞானிகளும் தியானித்து ஆனந்தநிலை பெறுகிறார்கள்.

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

11நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்துதேன் மற்றும் பழம்நைவேத்யம் செய்தால் சகல ஜன கோப நிவ்ருத்தி மற்றும் வீரலக்ஷ்மி ப்ரதம் ஏற்படும்.

**22. சகல சாம்ராஜ்ய ப்ராப்தம்**

भवानित्वंदासेमयिवितरदृष्टिंसकरुणा-

मितिस्तोतुंवाञ्छन्कथयतिभवानित्वमितियः|

तदैवत्वंतस्मैदिशसिनिजसायुज्यपदवीं

मुकुन्दब्रह्मेन्द्रस्फुटमकुटनीराजितपदाम्||२२||

*பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்*

*இதி ஸ்தோதும் வாஞ்சன் கதயதி பவானி த்வமிதி ய: |*

*ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜஸாயுஜ்ய-பதவீம்*

*முகுந்த -ப்ரம்ஹேந்த்ர ஸ்புட மகுட நீராஜிதபதாம் || 22 ||*

*தாயே ! உன்னுடைய பக்தன் உன்னைப் பார்த்து , தாயே ! பவானி ! உன்னுடைய கடைக்கண் பார்வை இந்த அடியவன் மீது படட்டும் என்று நினைத்து , 'பவானி நீ ' என்று சொல்ல ஆரம்பித்த உடனேயே , மும்மூர்த்திகளால் வணங்கப்பட்ட உனக்கு , அவன் மீது மிகுந்த கருணை ஏற்பட்டு, அவனுக்கு உன் சாயுஜ்ய பதவியைத் தருகின்றாய் . ( மோக்ஷத்தைத் தருகிறாய் )*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*45 நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து சித்ரான்னங்கள் நைவேத்யம் செய்தால் சகல சாம்ராஜ்ய ப்ராப்தம் ஏற்படும்.*

## 23. சர்வசம்பத்ப்ரதம்

त्वयाहृत्वावामंवपुरपरितृप्तेनमनसा

शरीरार्धंशम्भोरपरमपिशङ्केहृतमभूत्|

यदेतत्त्वद्रूपंसकलमरुणाभंत्रिनयनं

कुचाभ्यामानम्रंकुटिलशशिचूडालमकुटम्||२३||

த்வயா ஹ்ருத்வா வாமம் வபு-ரபரித்ருப்தேன மனஸா

ச ரீரார்த்தம் சம்போ-ரபரமபி சங்கே ஹ்ருதமபூத் |

யதேதத் த்வத்ரூபம் ஸகலமருணாபம் த்ரினயனம்

குசாப்யாமானம்ரம் குடில: சசி சூடால-மகுடம் || 23 ||

அம்மா ! சிவந்த சந்திரக்கலையுடன் கூடிய மணிமுடி , மூன்று கண்கள் , பருத்த இரு ஸ்தனங்களோடு, நீ சற்று முன்புறம் சாய்ந்து இருப்பதைப் பார்த்தால், நீ, ஆதி சிவனுடைய இடப்பாகத்தை அபஹரித்தது போதாமல் , ஆசை தணியாமல், அவருடைய முழு பாகத்தையும் அபஹரித்து விட்டது போல் தோன்றுகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து பாயசம் மற்றும் உளுந்து வடை நைவேத்யம் செய்தால் சகல சர்வசம்பத்ப்ரதம் ஏற்படும். ரண விமோசனம் கிடைக்கும்.

**24. சமஸ்த பூதப்ரத உச்சாடனம்**

जगत्सूतेधाताहरिरवतिरुद्रःक्षपयते

तिरस्कुर्वन्नेतत्स्वमपिवपुरीशस्तिरयति|

सदापूर्वःसर्वंतदिदमनुगृह्णातिचशिव-

स्तवाज्ञामालम्ब्यक्षणचलितयोर्भ्रूलतिकयोः||२४||

*ஜகத்ஸூதே தாதா ஹரிரவதி ருத்ர: க்ஷபயதே*

*திரஸ்குர்வ-ன்னேதத் ஸ்வமபி வபு-ரீசஸ் திரயதி |*

*ஸதா பூர்வ: ஸர்வம் ததித மனுக்ருஹ்ணாதி ச சிவஸ்*

*தவாஜ்ஞா மலம்ப்ய க்ஷணசலிதயோர் ப்ரூலதிகயோ: || 24 ||*

*தாயே ! படைக்கும் கடவுளான பிரம்மா , காக்கும் கடவுளான விஷ்ணு , அழிக்கும் கடவுளான ருத்ரன் ஆகிய மூவரையும் ஈசனானவர் தன்னுள் மறையும்படி செய்து தானும் மறைகிறார் (கண்ணுக்குத் தெரியாமல் ). பின் உன் கொடி போன்ற புருவத்தின் அசைப்பால், நீ காட்டிய உத்தரவை மதித்து, சதாசிவன் இன்நால்வருக்கும் அனுக்கிரகம் செய்து , மீண்டும் உலகத்தை உற்பத்திச் செய்வதற்காக அவர்களைப் படைக்கிறார் .*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

20 நாட்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன், உளுந்து வடை மற்றும் எள்ளுஞ் சாதம் (தித்திப்பு) நைவேத்யம் செய்தால் சமஸ்த பூதப்ரத உச்சாடனம், க்ஷுத்ர ரோக நிவாரணம் ஏற்படும் .

## 25. அதிகரப்ப்ராப்தம்

त्रयाणांदेवानांत्रिगुणजनितानांतवशिवे

भवेत्पूजापूजातवचरणयोर्याविरचिता|

तथाहित्वत्पादोद्वहनमणिपीठस्यनिकटे

स्थिताह्येतेशश्वन्मुकुलितकरोत्तंसमकुटाः||२५||

*த்ரயாணாம் தேவானாம் த்ரிகுண-ஜனிதானாம் தவ சிவே*

*பவேத் பூஜா பூஜா தவ சரணயோர் யா விரசிதா |*

*ததா : த்வத்பாதோத்வஹன-மணிபீடஸ்ய நிகடே*

*ஸ்திதா ஹ்யேதே-சஷ்வன் முகுலித கரோத்தம்ஸ-மகுடா: || 25 ||*

*அன்னையே ! தேவீ ! மும்மூர்த்திகளான பிரம்மா ,விஷ்ணு, ருத்ரன் (முக்குணங்களை உடையவர்கள் ) ஆகியோர், தன் மணிமுடிகளின் மீது , கூப்பிய கரங்களுடன் உன்னை வணங்கியபடி நிற்பதால் , உன் சரணங்களுக்குச் செய்யும் பூஜையானது, அவர்களையும் பூஜிப்பது போல் ஆகின்றது.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *நாட்களுக்கு தினமும்* 1,000 *முறை பாராயணம் செய்து தேன் நைவேத்யம் செய்தால் அதிகரப்ப்ராப்தம் கிட்டும்.*

**26. சத்ரு நாசனம்**

विरिञ्चिःपञ्चत्वंव्रजतिहरिराप्नोतिविरतिं

विनाशंकीनाशोभजतिधनदोयातिनिधनम्|

वितन्द्रीमाहेन्द्रीविततिरपिसंमीलितदृशा

महासंहारेऽस्मिन्विहरतिसतित्वत्पतिरसौ||२६||

*விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்னோதி விரதிம்*

*வினாசம் கீனாசோ பஜதி தனதோ யாதி நிதனம் |*

*விதன்த்ரீ மாஹேன்த்ரீ-விததிரபி ஸம்மீலி தத்ருஷா*

*மஹாஸம்ஹாரேஅஸ்மின்விஹரதிஸதித்வத்பதிரஸௌ|| 26 ||*

*தாயே ! மஹா பிரளய காலத்தில் பஞ்சபூதங்களும் , பிரம்மா ,விஷ்ணு , யமன் , குபேரன் முதலியோரும்,தேவேந்திரன் உள்ளிட்ட மற்ற தேவர் கூட்டமும் அழிய , நீ மட்டும் அழியாமல் சதாசிவனின் சம்ஹார ருத்ர தாண்டவத்தைப் பார்த்து மகிழ்வது , உன் கற்பின் சக்தியால் அன்றோ ? (கடைசியில் சிவனும் சக்தியும் மட்டுமே இருப்பது மீண்டும் உலகத்தை உண்டாக்க).*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

6 *அம்மாவாசை தினங்களுக்கு தினமும்* 1,000 *முறை பாராயணம் செய்து சர்க்கரை பொங்கலை நைவேத்யம் செய்தால் சத்ருவை வெல்லும் யோகம் கிட்டும்.*

**27. ஆத்ம ஞான சித்தி**

जपोजल्पःशिल्पंसकलमपिमुद्राविरचना

गतिःप्रादक्षिण्यक्रमणमशनाद्याहुतिविधिः|

प्रणामस्संवेशस्सुखमखिलमात्मार्पणदृशा

सपर्यापर्यायस्तवभवतुयन्मेविलसितम्||२७||

*ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ராவிரசனா*

*கதி: ப்ராதக்ஷிண்ய-க்ரமண-மசனாத்யா ஹுதி-விதி: |*

*ப்ரணாம: ஸம்வேச: ஸுகமகில-மாத்மார்பணத் த்ருசா*

*ஸபர்யா பர்யாய-ஸ்தவ பவது யன்மே விலஸிதம் || 27 ||*

*தாயே ! நான் பேசுவது எல்லாம் உன் மந்திர ஜபமாகவும் , என் உடல் அசைவு உன்னுடைய பூஜாரூபமான முத்திரைகளாகவும் , நான் நடப்பது உன்னை வலம் வருவதாகவும் ,நான் சாப்பிடுவது உன்னைக்குறித்துச் செய்யும் ஹோமத்தின் ஆகுதியாகவும் , படுப்பது உன்னை வணங்குவதாகவும் , நான் செய்யும் மற்ற செயல்கள் யாவும் உனக்குச் செய்யும் பூஜையாக இருக்கட்டும்.*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து பால் நைவேத்யம் செய்தால் ஆத்ம ஞான சித்தி மற்றும் சகல ஜபசித்தி கிட்டும்.

28. **சகல விஷ நிவ்ருத்தி**

सुधामप्यास्वाद्यप्रतिभयजरामृत्युहरिणीं

विपद्यन्तेविश्वेविधिशतमखाद्यादिविषदः|

करालंयत्क्ष्वेलंकबलितवतःकालकलना

नशम्भोस्तन्मूलंतवजननिताटङ्कमहिमा||२८||

*ஸுதாமப்யாஸ்வாத்ய ப்ரதி-பய-ஜரம்ருத்யு-ஹரிணீம்*

*விபத்யன்தே விஷ்வே விதி-சதமகாத்யா திவிஷத: |*

*கராலம் யத் க்ஷ்வேலம் கபலிதவத: காலகலனா*

*ந சம்போஸ்தன்மூலம் தவ ஜனனி தாடங்க ம:மா || 28 ||*

*தாயே ! மஹா பிரளய காலத்தில் பிரம்மா , இந்திரன் முதலான தேவர்கள் , முதுமை , மரணம் நீக்கும் அமிர்தம் அருந்திய பிறகும் அழிந்து போகின்றனர் . ஆனால் ஆலகால விஷத்தை அருந்திய உன் துணைவன் சதாசிவன் மட்டும் காலன் வசப்படவில்லை . கற்புக்கரசியே ! இதற்குக் காரணம் உன் தாடங்க (காதணி ) மகிமை தானே !*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *தினங்களுக்கு தினமும்* 1,000 *முறை பாராயணம் செய்து த்ரிமதுரம் ,பால் பாயசம்,தாம்பூலம் நைவேத்யம் செய்தால் சகல விஷ நிவ்ருத்தி மற்றும் கார்ய சித்தி உண்டாகும்.*

29. **பிரசவ ருஷ்ட நிவ்ருத்தி**

किरीटंवैरिञ्चंपरिहरपुरःकैटभभिदः

कठोरेकोटीरेस्खलसिजहिजम्भारिमुकुटम्|

प्रणम्रेष्वेतेषुप्रसभमुपयातस्यभवनं

भवस्याभ्युत्थानेतवपरिजनोक्तिर्विजयते||२९||

*கிரீடம் வைரிஞ்சம் பரிஹர புர: கைடபபித:*

*கடோரே கோடீரே ஸ்கலஸி ஜ: ஜம்பாரி-மகுடம் |*

*ப்ரணம்ரேஷ்வேதேஷு ப்ரஸப-முபயாதஸ்ய பவனம்*

*பவஸ்யப்யுத்தானே தவ பரிஜனோக்திர்விஜயதே || 29 ||*

*உன்னைக் காண்பதற்கு , சிவன் உன் இருப்பிடம் தேடி வரும்போது , நீ வேகமாக பரபரப்புடன் எழுந்து வருவதைக் கண்ட உன் சக தோழிகள் , ஹரி , ஹரன் , இந்திரன் முதலான பிரம்மாதி தேவர்கள் உன்னை நமஸ்க்கரிப்பதால் அவர்களுடைய மணி மகுடங்கள் உன் காலில் இடறப்போகின்றதே , அவைகளை ஒதிக்கிவிடு என்று உனக்கு நினைவு கூர்வது உன் பெருமையை எடுத்துக் காட்டுகிறது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*45 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து குளான்னம் நைவேத்யம் செய்தால் பிரசவ ருஷ்ட நிவ்ருத்தி, சீக்ரம் பிரசவ பாக்கியம் உண்டாகும்.*

30. **தைர்யப்ரப்தம்**

स्वदेहोद्भूताभिर्घृणिभिरणिमाद्याभिरभितो

निषेव्येनित्येत्वामहमितिसदाभावयतियः|

किमाश्चर्यंतस्यत्रिनयनसमृद्धिंतृणयतो

महासंवर्ताग्निर्विरचयतिनिराजनविधिम्||३०||

ஸ்வதேஹோத்பூதாபி-ர்க்ருணிபி-ரணிமாத்யாபி-ரபிதோ

நிஷேவ்யே நித்யே த்வா மஹமிதி ஸதா பாவயதி ய: |

கிமாச்சர்யம் தஸ்ய த்ரினயன-ஸம்ருத்திம் த்ருணயதோ

மஹாஸம்வர்தாக்னிர் விரசயதி நீராஜனவிதிம் || 30 ||

ஆதி அந்தமில்லாத தாயே ! உன்னுடைய சரணங்களிலிருந்து வெளிவரும் கிரணங்களாகிய அணிமா , ம:மா போன்ற ( 8 ) சக்திகளால் சூழப்பட்டவளே ! உன்னை எவன் எப்பொழுதும் மனதில் தியானம் செய்கிறானோ , அவனுக்கு சிவ சாயுஜ்ய பதவி கூட ஒரு வறண்ட புல் போல் தோன்றும் . மகா பிரளய கால அக்னி அவனுக்கு மங்கள ஹாரத்தி செய்திடும் என்பதில் என்ன ஆச்சர்யம் ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

96 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து குளான்னம், த்ரிமதுரம் ,தாம்பூலம் மற்றும் மது நைவேத்யம் செய்தால் பரகாய பிரவேசனம், ,தைர்யப்ரப்தம் ஏற்படும்.

**31. சகல சம்பத்ப்ரதம்**

चतुष्षष्ट्यातन्त्रैःसकलमतिसंधायभुवनं

स्थितस्तत्तत्सिद्धिप्रसवपरतन्त्रैःपशुपतिः|

पुनस्त्वन्निर्बन्धादखिलपुरुषार्थैकघटना-

स्वतन्त्रंतेतन्त्रंक्षितितलमवातीतरदिदम्||३१||

சது:-ஷஷ்டயா தன்த்ரை: ஸகல மதிஸன்தாய புவனம்

ஸ்திதஸ்தத்த்த-ஸித்தி ப்ரஸவ பரதன்த்ரை: பசுபதி: |

புனஸ்த்வ-ன்னிர்பன்தா தகில-புருஷார்தைக கடனா-

ஸ்வதன்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதல மவாதீதர-திதம் || 31 ||

நாம் விரும்புகின்ற அந்தந்த சித்திகளைப் பெறுவதற்கு 64 சாத்திரங்களை அளித்து சிவனும் மௌனமாக இருந்தார் . அதனை உலகம் தவறாக பயன்படுத்தி , துராசாரத்தில் ஈடுபடுவதைப் பார்த்து சிவன் மௌனமாக இருந்தார் . திரும்பவும் உன்னுடைய கட்டாயத்தால் சகல புருஷார்த்தங்களையும் ஒருங்கே கொடுக்கக்கூடிய பஞ்சதசாக்ஷரி என்ற மந்திரத்தை உலகுக்கு அளித்தாயே !

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன் , பால், பழம் நைவேத்யம் செய்தால் சகல வஷ்யம் மற்றும் சகல செல்வ சம்பத்களை அடைய வைப்பு நம்மை தேடி வரும்.

## 32. வியாபார ஜெயம்

शिवःशक्तिःकामःक्षितिरथरविःशीतकिरणः

स्मरोहंसःशक्रस्तदनुचपरामारहरयः|

अमीहृल्लेखाभिस्तिसृभिरवसानेषुघटिता

भजन्तेवर्णास्तेतवजननिनामावयवताम्||३२||

*சிவ: சக்தி: காம: க்ஷிதி-ரத ரவி: சீதகிரண:*

*ஸ்மரோ ஹம்ஸ: சக்ர-ஸ்ததனு ச பரா-மார-ஹரய: |*

*அமீ ஹ்ருல்லேகாபி-ஸ்திஸ்ருபி-ரவஸானேஷு கடிதா*

*பஜன்தே வர்ணாஸ்தே தவ ஜனனி நாமாவயவதாம் || 32 ||*

*சிவ , சக்தி , காம , ப்ருத்வீ பீஜங்கள் ஒரு பிரிவும் , ரவி, சந்திர , மன்மத , ஹம்ச, இந்திர பீஜங்கள் ஒரு பிரிவும், பரா , மன்மதா, ஹரி பீஜங்கள் ஒரு பிரிவும் ஆகிய இந்த பீஜங்களின் கடைசியில் சேர்க்கப்பட்ட ஹ்ரீம் காரங்களும் சேர்ந்து இந்த 15 அட்ஷரங்களும் உன்னுடைய மஹா மந்திரப் பகுதிகளின் அங்கங்களாக விளங்குகின்றன .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *தினங்களுக்கு தினமும்* 1,000 *முறை பாராயணம் செய்து தத்யன்னம், உளுந்து வடை , சர்க்கரை பொங்கல் நைவேத்யம் செய்தால் மோகினி சித்தி மற்றும் சகல வியாபார ஜெயம் நிச்சயம்.*

**33. த்ரவ்யசம்பத்வ்ருத்தி**

स्मरंयोनिंलक्ष्मींत्रितयमिदमादौतवमनो-

र्निधायैकेनित्येनिरवधिमहाभोगरसिकाः|

भजन्तित्वांचिन्तामणिगुननिबद्धाक्षवलयाः

शिवाग्नौजुह्वन्तःसुरभिघृतधाराहुतिशतैः||३३||

ஸ்மரம் யோனிம் லக்ஷ்மீம் த்ரிதய-மித-மாதௌ தவ மனோர்

நிதாயைகே நித்யே நிரவதி-மஹாபோக-ரஸிகா: |

பஜந்தி த்வாம் சிந்தாமணி-குணனிபத்தாக்ஷ-வலயா:

சிவாக்னௌ ஜுஹ்வந்த: ஸுரபிக்ருத-தாராஹுதி: சதை:|| 33 ||

தாயே ! உன்னை எப்போதும் தொடர்ச்சியாக இடைவெளி இல்லாமல் தியானம் செய்து அதனால் கிடைக்கும் ஆனந்தத்தை உணர்ந்தவர்களான சிவ யோகீஸ்வரர்கள் , சிந்தாமணி யாலான அட்ஷ மாலையை உடையவர்களாய் , உன்னுடைய மந்திரத்தின் முன் , காமபீஜ மந்த்ரமான "க்லீம்", புவனேஸ்வரி மந்த்ரமான " ஹ்ரீம் ", லக்ஷ்மி மந்த்ரமான" ஸ்ரீம் ", இவைகளைச் சேர்த்து, த்ரீ கோணமான அக்னி குண்டத்தில் , ஸ்ரீ சக்கரத்தில் இருக்கும் உன்னை எண்ணி பசு நெய் தாரைகளால் ஹோமம் செய்து உன்னை மகிழ்விக்கின்றனர் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து முத்கன்னம் , சித்ரான்னம் தேன் , நைவேத்யம் செய்தால் சம்பத்வ்ருத்தி ஏற்படும்.

**34. சகல வருண ரோக நிவ்ருத்தி**

शरीरंत्वंशम्भोःशशिमिहिरवक्षोरुहयुगं

तवात्मानंमन्येभगवतिनवात्मानमनघम्|

अतश्शेषश्शेषीत्ययमुभयसाधारणतया

स्थितःसंबन्धोवांसमरसपरानन्दपरयोः||३४||

*சரீரம் த்வம் சம்போ: சசி-மி:ர-வக்ஷோருஹ-யுகம்*

*தவாத்மானம் மன்யே பகவதி நவாத்மான-மனகம் |*

*அத: சேஷ: சேஷீத்யய முபய ஸாதாரணதயா*

*ஸ்தித: ஸம்பன்தோ வாம் ஸமரஸ-பரானன்த-பரயோ: || 34 ||*

*ஈஸ்வரியே ! என்னுடைய மனக் கண்ணால் உன்னைப் பார்க்கும் பொழுது , சூர்ய சந்திரர்களை ஸ்தனமாகக் கொண்டு , நீ பரமேஸ்வரனுக்கு உடலாக இருக்கின்றாய் . உன்னுடைய உடல் தோஷமற்ற புதிய ஆத்மாவாகவும் , நவ வியூக ஆத்மாவான சிவனுடைய உடல் உன்னுடயதாகவும் இருக்கிறது . எனவே உனது கரி நிறம் ஆனந்த பைரவர் உடலாகவும் , சிவனின் உடல் உனதாகவும் தோன்றுகிறது . எனவே நீங்கள் இருவரும் ஒன்றுபட்ட உடலாக , சமமான குணங்களை உடையவராக இருப்பதால் , நான் , எனது என்ற சம்பந்தமும் ஒன்றாக இருப்பதால் , ஆனந்தபைரவர் , ஆனந்தபைரவி யாக எல்லா வகையிலும் சமமாக இருக்கிறிர்கள்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *தினங்களுக்கு தினமும்* 1,000 *முறை பாராயணம் செய்து தேன் மிலகை பொடி செய்து நெய்யில் கலந்து நைவேத்யம் செய்தால் சகல வருண ரோக நிவ்ருத்தி ஏற்படும்.*

### 35. க்ஷா ரோக நிவ்ருத்தி

मनस्त्वंव्योमत्वंमरुदसिमरुत्सारथिरसि

त्वमापस्त्वंभूमिस्त्वयिपरिणतायांनहिपरम्|

त्वमेवस्वात्मानंपरिणमयितुंविश्ववपुषा

चिदानन्दाकारंशिवयुवतिभावेनबिभृषे||३५||

*மனஸ்த்வம் வ்யோம த்வம் மருதஸி மருத்ஸாரதி-ரஸி*

*த்வமாப-ஸ்த்வம் பூமி-ஸ்த்வயி பரிணதாயாம் ந : பரம் |*

*த்வமேவ ஸ்வாத்மானம் பரிண்மயிதும் விஷ்வ வபுஷா*

*சிதானந்தாகாரம் சிவயுவதி பாவேன பிப்ருஷே || 35 ||*

*தாயே ! நீயே மனஸ் , ஆகாய , வாயு , அக்னி , நீர் , பூமி தத்துவம் . நீயேதான் இந்த உலகமாக இருக்கிறாய் . நீயேதான் பிரம்மஸ்வரூபமான சிவதத்வம் . இந்த உலகத்திற்காக நீயேதான் சிவனின் பட்ட ம:ஷியாகவும் இருக்கின்றாய் .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து தேன் ,சர்க்கரை, பாயசம் நைவேத்யம் செய்தால் சகல க்ஷாரோக நிவ்ருத்தி ஏற்படும்.

**36. சகல ரோக நிவ்ருத்தி**

तवाज्ञाचक्रस्थंतपनशशिकोटिद्युतिधरं

परंशम्भुंवन्देपरिमिलितपार्श्वंपरचिता|

यमाराध्यन्भक्त्यारविशशिशुचीनामविषये

निरालोकेऽलोकेनिवसतिहिभालोकभवने||३६||

*தவாஜ்ஞசக்ரஸ்தம் தபன-சசி கோடி-த்யுதிதரம்*

*பரம் சம்பு வன்தே பரிமிலித-பார்ச்வம் பரசிதா |*

*யமாராத்யன் பக்த்யா ரவி சசி சுசீனா-மவிஷயே*

*நிராலோகே லோகேநிவஸதி:பாலோக-புவனே|| 36 ||*

*தாயே ! உன்னுடைய புருவ மத்தியில் உள்ள ஆஜ்ஞா சக்கரத்தில் இருப்பவரும் , ஆயிரம் கோடி சூர்ய சந்திரர்களின் ஒளியை உடையவரும் , சகுண , நிர்குண சக்திகளை இரு பக்கங்களில் உடையவருமான , பரமசிவனையும் , உன்னையும் எவன் தியானம் செய்கிறானோ அவன் , ஆயிரம் கோடி சூர்ய சந்திரனைவிட ஒளிமிகுந்த (கண்ணுக்கு புலப்படாத ) ஒரு ஜோதிமயமான உயர்ந்த உலகத்தை அடைகிறான் .*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1,000 முறை பாராயணம் செய்து அத்ருசம் ,வடை ,பாயசம் நைவேத்யம் செய்தால் சகல ரோக நிவாரணம் மற்றும் பிரிாமராக்ஷச நிவாரணம் ஏற்படும்.

**37. பூத, பிரேத பிசாச நிவ்ருத்தி**

विशुद्धौतेशुद्धस्फटिकविशदंव्योमजनकं

शिवंसेवेदेवीमपिशिवसमानव्यवसिताम्|

ययोःकान्त्यायान्त्याःशशिकिरणसारूप्यसरणे-

विधूतान्तर्ध्वान्ताविलसतिचकोरीवजगती||३७||

விசித்தௌ தே சுத்தஸஸ்படிக விசதம் வ்யோம-ஜனகம்

சிவம் ஸேவே தேவீமபி சிவஸமான-வ்யவஸிதாம் |

யயோ: காந்த்யா யாந்த்யா: சசிகிரண-ஸாரூப்யஸரணே

விதூதாந்தர் த்வாந்தா விலஸதி சகோரீவ ஜகதீ || 37 ||

தாயே உன்னுடைய விசுத்திச் சக்கரத்தில் , ஆகாய தத்துவத்தை உண்டுபண்ணுபவரும், சுத்த ஸ்படிகமணி போல் நிர்மலமானவருமான பரமசிவனையும் , உன்னையும் தியானம் செய்பவன் , உங்களிடமிருந்து வெளிவருகின்ற வெண்ணிலாவைப் போன்ற ஒளிமயமான காந்தியினால் , அறியாமை இருள் அழிக்கப்பட்டு , முழு நிலவைக் கண்ட சகோரபட்ஷி போல் , அமிர்தம் அருந்திய பரமானந்தத்தை அடைகிறான் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 5,000 முறை பாராயணம் செய்து பாயசம், பழம், தேங்காய், உளுந்துவடை நைவேத்யம் செய்தால் பிராமராக்ஷச ப்ரப்ருதி மற்றும் பூத, பிரேத பிசாச உபத்ரவ நிவ்ருத்தி ஏற்படும்.

### 38. *பாலாரிஷ்ட நிவ்ருத்தி*

समुन्मीलत्संवित्कमलमकरन्दैकरसिकं

भजेहंसद्वन्द्वंकिमपिमहतांमानसचरम्|

यदालापादष्टादशगुणितविद्यापरिणति-

र्यदादत्तेदोषाद्गुणमखिलमद्भ्यःपयइव||३८||

*ஸமுன்மீலத் ஸம்வித்கமல-மகரன்தைக-ரஸிகம்*

*பஜே ஹம்ஸத்வன்த்வம் கிமபி மஹதாம் மானஸசரம் |*

*யதாலாபா-தஷ்டாதச-குணித-வித்யாபரிணதி:*

*யதாதத்தே தோஷாத் குண-மகில-மத்ப்ய: பய இவ || 38 ||*

*அன்னையே ! எந்த இரு ஹம்சத்தினுடைய பேச்சானது ( ஒலி ),18 வித்தைகளுக்கு ( தந்திரம்/ கலை ) மூலமாக இருக்கின்றதோ , பாலிலிருந்து தண்ணீரை பிரிப்பது போல் சகல தோஷங்களையும் பிரித்து , குணங்களை மட்டும் ஏற்றுக்கொள்கின்றனவோ , மகான்களுடைய மனமாகிய (ஞானம் ) தாமரை மலரிலுள்ள தேனைப் பருகுகின்றனவோ, அத்தகைய வருணனைக்கும் அப்பாற்பட்ட மகிமையுடன் கூடிய ஹம்ச தம்பதிகளான உங்களை என்னுடைய இதயகமலத்தில் தியானம் செய்து நமஸ்க்கரிக்கிறேன்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 தினங்களுக்கு தினமும் 5,000 முறை பாராயணம் செய்து அபீஷ்ட நிவேதனம் செய்தால் பாலாரிஷ்ட நிவ்ருத்தி கிட்டும்.

**39. துஸ்வப்ன நிவாரணம்**

तवस्वाधिष्ठानेहुतवहमधिष्ठायनिरतं

तमीडेसंवर्तंजननिमहतींतांचसमयाम्|

यदालोकेलोकान्दहतिमहतिक्रोधकलिते

दयार्द्रायादृष्टिःशिशिरमुपचारंरचयति||३९||

தவ ஸ்வாதிஷ்டானே ஹுதவஹ-மதிஷ்டாய நிரதம்

தமீடே ஸம்வர்தம் ஜனனி மஹதீம் தாம் ச ஸமயாம் |

யதாலோகே லோகான் தஹதி மஹஸி க்ரோத-கலிதே

தயார்த்ரா யா த்ருஷ்டி: சிசிர-முபசாரம் ரசயதி || 39 ||

தாயே ! காலாக்னி ருத்ரரையும் , அந்த காலாக்னி ருத்ர ரூபிணியான உன்னையும் , என்னுடைய சுவாதிஷ்டான சக்கரத்தில் ( அக்னி ) , தியானம் செய்து வணங்குகிறேன் . சிவனுடைய ருத்ராக்னி பார்வையானது உலகங்களை அழிக்கும் சமயம் , உன்னுடைய நிலவைப் போன்ற கனிந்த பார்வையானது , (சந்திரகலா சக்தி /சமயா /சந்திரகலா தேவீ ) இந்த உலகை மீண்டும் குளிரச் செய்கின்றது . (தகிக்கப்பட்ட மன்மதன் உன் கருணையால் ரதியின் கண்களுக்கு மட்டும் தெரிவது போல் ).

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

12 தினங்களுக்கு தினமும் 108 முறை பாராயணம் செய்து பொங்கல், பால் பாயசம் ,தேன் நிவேதனம் செய்தால் துஸ்வப்னதிலிரிருந்து நிவ்ருத்தி கிட்டும்.

**40. நினைத்ததை ச்வப்னத்தில் காணலாம்**

तटित्त्वन्तंशक्त्यातिमिरपरिपन्थिफुरणया

स्फुरन्नानारत्नाभरणपरिणद्धेन्द्रधनुषम्|

तवश्यामंमेघंकमपिमणिपूरैकशरणं

निषेवेवर्षन्तंहरमिहिरतप्तंत्रिभुवनम्||४०||

தடித்வந்தம் சக்த்யா திமிர-பரிபந்தி-ஸ்புரணயா

ஸ்புர-ன்னா நரத்னாபரண-பரிணத்தேந்த்ர-தனுஷம் |

தவ ஷ்யாமம் மேகம் கமபி மணிபூரைக-சரணம்

நிஷேவே வர்ஷன்தம்-ஹரமி:ர-தப்தம் த்ரிபுவனம் || 40 ||

அம்மா ! மணி பூரகச்( நீர் ) சக்கரத்தை மூலமாகக் கொண்டு , சிவனை, மழைக் காலத்து நீண்ட கருத்த மேகமாகவும் , உன்னை மின்னல் கொடியாகவும் நினைத்து வணங்குகிறேன். இருளைப் போக்கும் மின்னலாக நீ இருக்கிறாய் . நீ அணிந்திருக்கும் ரத்ன ஆபரணங் களிலிருந்து வீசும் ஒளியானது , அந்த மேகங்கள் ஒளிமயமாக இந்திர வில்லுடன் கூடியது போல் தோன்றுகிறது . காலாக்னி ருத்ரனால் தகிக்கப்பட்ட மூ உலகங்களையும் , தன் அமுத மழையினால் குளிரச் செய்கின்ற உன்னுடைய சதாசிவ தத்துவத்தை வணங்குகின்றேன் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து பால் பாயசம் ,தாம்பூலம் நிவேதனம் செய்தால் நினைத்ததை ச்வப்னத்தில் காணும் பாக்கியம் உண்டாகும்.

**41. குல்ம ரோக நிவாரணம்**

तवाधारेमूलेसहसमययालास्यपरया

नवात्मानंमन्येनवरसमहाताण्डवनटम्|

उभाभ्यामेताभ्यामुदयविधिमुद्दिश्यदयया

सनाथाभ्यांजज्ञेजनकजननीमज्जगदिदम्||४१||

தவாதாரே மூலே ஸஹ ஸமயயா லாஸ்யபரயா

னவாத்மான மன்யே னவரஸ-மஹாதாண்டவ-நடம் |

உபாப்யா மேதாப்யா-முதய-விதி முத்திஷ்ய தயயா

ஸனாதாப்யாம் ஜஜ்ஞே ஜனக ஜனனீமத் ஜகதிதம் || 41 ||

தாயே ! உன் மூலாதாரத்தில் , நடனத்தில் பிரியமுள்ள சமயாதேவியுடன் , ஸ்ருங்கார ரசங்களுடன் மகா தாண்டவ நடனம் செய்யும் ஆனந்தபைரவருடன் உன்னையும் தியானம் செய்து வணங்குகிறேன் . பிரளய காலத்தில் அழிந்த உலகத்தை மீண்டும் உண்டாக்க வேண்டுமென்று நீங்கள் இருவரும் ஸ்ருஷ்டி தாண்டவ நடனம் செய்வதால் , பைரவர் , பைரவி ஆகிய உங்களை கருணை வடிவான தாய் , தந்தையராக இவ்வுலகம் அடைந்தது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் , பொங்கல் நிவேதனம் செய்தால் குல்ம ரோக நிவாரணம் உண்டாகும்.

**42. ஜல ரோக நிவாரணம்**

गतैर्माणिक्यत्वंगगनमणिभिःसान्द्रघटितं

किरीटंतेहैमंहिमगिरिसुतेकीर्तयतियः|

सनीडेयच्छायाच्छुरणशबलंचन्द्रशकलं

धनुःशौनासीरंकिमितिननिबध्नातिधिषणाम्||४२||

*கதை-ர்மாணிக்யத்வம் ககனமணிபி: ஸான்த்ரகடிதம்*

*கிரீடம் தே ஹைமம் :மகிரிஸுதே கீதயதி ய: ||*

*ஸ நீடேயச்சாயா-ச்சுரண-சகலம் சந்த்ர-சகலம்*

*தனு: ஸௌநாஸீரம் கிமிதி ந நிபத்நாதி திஷணாம் || 42 ||*

*அன்னையே ! மலையரசன் பெற்ற மாணிக்கமே ! உன்னுடைய கிரீடத்தை எந்த பக்தனாவது வருணிக்க நினைத்தால் , பன்னிரண்டு சூரியர்களே , மாணிக்கங்களாக இழைக்கப்பட்டிருக்கும் உன் கிரீடத்தில், நெருக்கமாகப் பதிக்கப்பட்டிருக்கும் இரத்தினங்களின் ஒளியால், மின்னுகின்ற உன்னுடைய சந்திரக்கலைதனை, வானவில்லோ அல்லது இந்திரதனுசோ என்றே எண்ணுவான் .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து பால், சர்க்கரை நிவேதனம் செய்தால் சகல வஷ்ய ப்ரதம் மற்றும் ஜலரோக நிவாரணம் கிடைக்கும்.*

### 43. சகலமும் ஜயமாகும்

धुनोतुध्वान्तंनस्तुलितदलितेन्दीवरवनं

घनस्निग्धश्लक्ष्णंचिकुरनिकुरुम्बंतवशिवे|

यदीयंसौरभ्यंसहजमुपलब्धुंसुमनसो

वसन्त्यस्मिन्मन्येवलमथनवाटीविटपिनाम्||४३||

துனோது த்வாந்தம் ந ஸ்துலித-தலிதேன்தீவர-வனம்

கனஸ்னிக்த-ஸ்லக்ஷ்ணம் சிகுர நிகுரும்பம் தவ சிவே |

யதீயம் ஸௌரப்யம் ஸஹஜ-முபலப்தும் ஸுமனஸோ

வஸன்த்யஸ்மின் மன்யே பலமதன வாடீ-விடபினாம் || 43 ||

தாயே! மலர்ந்த கருங்குவளை ( நீலோத்பலம் ) மலர்க்காடு போன்றதும் , நெருக்கமானதும் , மிருதுவானதும், வழ வழப்பானதுமான உன் கேசத்தின் அழகு, எங்களின் அறியாமையை நீக்கட்டும் . உன் கேசத்தின் இயற்கை மணத்தைத் தானும் அடைய எண்ணி , இந்திரனுடைய நந்தவனத்து மலர்கள் உன் கூந்தலை அலங்கரிக்கின்றனவோ ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து ம்ருஷ்டான்னம் நிவேதனம் செய்தால் சகலமும் ஜெயமாகும்,வஷ்யமுண்டாகும்,,ரோகம் தீரும்.

### 44. சகல ரோக நிவ்ருத்தி மற்றும் கார்ய சித்தி

तनोतुक्षेमंनस्तववदनसौन्दर्यलहरी-

परीवाहस्रोतःसरणिरिवसीमन्तसरणिः|

वहन्तीसिन्दूरंप्रबलकबरीभारतिमिर-

द्विषांबृन्दैर्बन्दीकृतमिवनवीनार्ककिरणम्||४४||

*தனோது க்ஷேமம் ந-ஸ்தவ வதனஸௌந்தர்யலஹரீ*

*பரீவாஹஸ்ரோத:-ஸரணிரிவ ஸீமந்தஸரணி:|*

*வஹந்தீ- ஸிந்தூரம் ப்ரபலகபரீ-பார-திமிர*

*த்விஷாம் ப்ருன்தைர் பந்தீக்ருதமிவ நவீநார்க கிரணம் || 44 ||*

அம்மா ! உன் கேசத்தின் நடுவில் உள்ள வகிடு , உன் முகத்திற்கு அழகு சேர்க்கின்றது . பால சூர்யா கிரணம் போன்று உன் வகிட்டில் மின்னும் சிந்தூர வர்ண குங்குமமானது , உன் அடர்ந்த இருட்டு போன்ற, கருமையான கேசம் என்ற எதிரிகளின் சிறையில் அடைக்கப்பட்டது போல் உள்ளது . அந்த முகத்தின் அழகு வெள்ளத்திற்கு கால்வாய் போன்ற உனது கேச வகிடு, எங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் தரட்டும் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

1) 12 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் சகல ரோகம் தீரும்.

2) 12 தினங்களுக்கு தினமும் 1009 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் சகல ஜனவஷ்யம் மற்றும் அனைத்து கார்யங்களிலும் ஜெயம் கிட்டும்.

**45. வாக்பலிதம்**

अरालैःस्वाभाव्यादलिकलभसश्रीभिरलकैः

परीतंतेवक्त्रंपरिहसतिपङ्केरुहरुचिम्|

दरस्मेरेयस्मिन्दशनरुचिकिञ्जल्करुचिरे

सुगन्धौमाद्यन्तिस्मरदहनचक्षुर्मधुलिहः||४५||

*அராலை ஸ்வாபாவ்யா-தலிகலப-ஸஶ்ரீபி ரலகை:*

*பரீதம் தே வக்த்ரம் பரிஹஸதி பங்கேருஹருசிம் |*

*தரஸ்மேரே யஸ்மின் தசனருசி கிஞ்ஜல்க-ருசிரே*

*ஸுகன்தௌ மாத்யன்தி ஸ்மரதஹன சக்ஷுர் மதுலிஹ: || 45 ||*

தாயே ! இயற்கையாகவே சுருண்டதும் , இள வண்டுகள் போல் பளபளப்புடன் தங்கமயமாக ஒளிரும் கேசத்தையுடைய உன்னுடைய அழகான தங்க முகம், தாமரை மலரையும் பரிகாசம் செய்கின்றது . இந்த அழகிய முகத்தில் இதழ்கள் போன்று வரிசையான பல் வரிசையுடன் கூடிய உன் புன்சிரிப்பைக் கண்ட , காமனையும் வென்ற பரமசிவனின் கண்களாகிய வண்டுகள் , மயங்குகின்றன .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து த்ரிமதுரம் நிவேதனம் செய்தால் வாக்பலிதம் ஏற்படும்.

### 46. சர்வாபீஷ்ட சித்தி

ललाटंलावण्यद्युतिविमलमाभातितवय-

द्वितीयंतन्मन्येमकुटघटितंचन्द्रशकलम्|

विपर्यासन्यासादुभयमपिसंभूयचमिथः

सुधालेपस्यूतिःपरिणमतिराकाहिमकरः||४६||

லலாடம் லாவண்ய த்யுதி விமல-மாபாதி தவ யத்

த்விதீயம் தன்மன்யே மகுடகடிதம் சன்த்ரசகலம் |

விபர்யாஸ-ன்யாஸா துபயமபி ஸம்பூய ச மித:

ஸுதாலேபஸ்யூதி: பரிணமதி ராகா-:மகர: || 46 ||

தாயே ! உன் நெற்றி கீழ் நோக்கித் தொங்கவிடப்பட்ட , மற்றொரு சந்திரக்கலை போல் இருக்கிறது . உன் மணி முடியிலுள்ள சந்திரக்கலையையும் , நெற்றியிலுள்ள சந்திரக்கலையையும் ஒன்றுடன் ஒன்று திருப்பிவைத்துப் பொறித்தினால் , அது அமிர்தம் நிறைந்த முழு நிலவு போல் ஆகுமே !

**பாராயண முறை மற்றும் பலன்கள்**:

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன், பால், பாயசம் நிவேதனம் செய்தால் சர்வாபீஷ்ட சித்தி மற்றும் புத்ரப்ராப்தி அமையும்.

**47. சகல தேவதா வஷ்யம்**

भ्रुवौभुग्नेकिंचिद्भुवनभयभङ्गव्यसनिनि

त्वदीयेनेत्राभ्यांमधुकररुचिभ्यांधृतगुणम्।

धनुर्मन्येसव्येतरकरगृहीतंरतिपतेः

प्रकोष्ठेमुष्टौचस्थगयतिनिगूढान्तरमुमे॥४७॥

*ப்ருவெள புக்னே கிம்சித்புவன-பய-பங்கவ்யஸனினி*

*த்வதீயே நேத்ராப்யாம் மதுகர-ருசிப்யாம் த்ருதகுணம் |*

*தனு ர்மன்யே ஸவ்யேதரகர க்ருஹீதம் ரதிபதே:*

*ப்ரகோஷ்டே முஷ்டௌ ச ஸ்தகயதே நிகூடான்தர-முமே || 47 ||*

*சகல உலகங்களுக்கும் அபயமளிக்கும் அன்னையே ! உமையே ! சற்றே வளைந்திருக்கும் உன் புருவங்கள், உன் கண்களாகிய வண்டுகளை , நாண் கயிறாகக் கொண்ட காமனின் வில் போல் தோன்றுகிறது . காமனும் அதனை இடது கரத்தால் பிடித்தது போல், அவனின் முழங்கையும், மணிக்கட்டும் ,கைவிரல்பிடியும் , உன்னுடைய முகத்தின் மத்திய பாகத்தை மறைப்பது போல் உள்ளது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

25 *தினங்களுக்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து தேன்,தேங்காய்,பழம் நிவேதனம் செய்தால் சகல தேவதா வஷ்யம் மற்றும் சகல கார்ய ஜெயம் ஏற்படும் .*

**48. நவக்ரஹ தோஷ நிவ்ருத்தி**

अहः सूते सव्यं तव नयनमर्कात्मकतया
त्रियामां वामं ते सृजति रजनीनायकतया।
तृतीया ते दृष्टिर्दरदलितहेमाम्बुजरुचिः
समाधत्ते संध्यां दिवसनिशयोरन्तरचरीम्॥४८॥

அஹ: ஸூதே ஸவ்ய தவ நயன-மர்காத்மகதயா
த்ரியாமாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜனீநாயகதயா |
த்ருதீயா தே த்ருஷ்டி-ர்தரதலித-ஹேமாம்புஜ-ருசி:
ஸமாதத்தே ஸன்த்யாம் திவஸநிசயோ-ரந்தரசரீம் || 48 ||

தாயே ! சூர்யன் போன்ற உன் வலது கண் பகலையும் , சந்திரன் போன்ற இடது கண் இரவையும் உண்டாக்குகின்றது .சற்றே மலர்ந்த தங்கத் தாமரை போன்ற உனது மூன்றாவது கண் , காலை, மாலை ,என்ற இரண்டு சந்தியா காலங்களை உண்டாக்குகின்றது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

9 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன், சித்ரான்னம், பழம் நிவேதனம் செய்தால் நவக்ரஹ தோஷ நிவ்ருத்தி மற்றும் சகல சம்பத் ப்ரதம் கிடைக்கும்.

**49. நிதி தர்சனம்**

विशालाकल्याणीस्फुटरुचिरयोध्याकुवलयैः

कृपाधाराधाराकिमपिमधुराभोगवतिका|

अवन्तीदृष्टिस्तेबहुनगरविस्तारविजया

ध्रुवंतत्तन्नामव्यवहरणयोग्याविजयते||४९

*விசாலா கல்யாணீ ஸ்புதருசி-ரயோத்யா குவலயை:*

*க்ருபாதாராதாரா கிமபி மதுரா போகவதிகா |*

*அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹு நகர-விஸ்தார-விஜயா*

*த்ருவம் தத்தந்நாம-வ்யவஹரண-யோக்யாவிஜயதே || 49 ||*

*தாயே ! உன் கண்கள் விசாலமானது . அதனால் விசாலா என்றும் , மங்களமானதால் கல்யாணீ என்றும், இந்தீவர புஷ்பம் போன்று ( ப்ளூ லில்லி ) அழகானதால் அயோத்யா என்றும் , கருணை உள்ளவளாதலால் தாரா என்றும் , மாதுர்யத்தோடு கூடியவளாதலால் மதுரா ( இனிமையானவள் ) என்றும் , ஆழ்ந்து இருப்பதால் போகவதி என்றும் , சகல உலகங்களையும் காக்கும் சக்தி உள்ளவளாதலால் அவந்தி என்றும் , நகரங்களின் பெயர்களைச் கொண்டு அழைக்கும்படியான தகுதி கொண்டதே .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*10 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன், பொங்கல், நிவேதனம் செய்தால் நிதி தர்சனம் கிடைக்கும்.*

**50. வசூரி பாத நிவாரணம்**

कवीनांसंदर्भस्तबकमकरन्दैकरसिकं

कटाक्षव्याक्षेपभ्रमरकलभौकर्णयुगलम्|

अमुञ्चन्तौदृष्ट्वातवनवरसास्वादतरला-

वसूयासंसर्गादलिकनयनंकिंचिदरुणम्||५०||

*கவீனாம் ஸந்தர்ப-ஸ்தபக-மகரந்தைக-ரஸிகம்*

*கடாக்ஷ-வ்யாக்ஷேப-ப்ரமரகலபௌ கர்ணயுகலம் |*

*அமுஞ்சந்தௌ த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாத-தரலௌ*

*அஸூயா-ஸம்ஸர்கா-தலிகநயனம் கிஞ்சிதருணம் || 50 ||*

அம்மா ! உன் காதுகள் கவிகளின் காவியங்களான மலர்களில் உள்ள தேனைச் சுவைக்கின்றன. உன் கண்கள் நவரசங்களைப் பருகும் வண்டுகள் போல், உன் காதுகளை விட்டு அகலாமல் இருக்கின்றன . உன் கண்களைக் கண்டு பொறாமைக் கொண்ட உன் மூன்றாவது நெற்றிக்கண், சிறிது சிவந்தது போல் தோன்றுகிறது . (காது வரை நீண்ட அழகிய கண்கள் ).

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

5 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து சர்க்கரை கரும்பு நிவேதனம் செய்தால் வசூரி பாத நிவாரணம் கிடைக்கும்.

**51. *சர்வ ஜன வஷ்யம்***

शिवेशृङ्गारार्द्रातदितरजनेकुत्सनपरा

सरोषागङ्गायांगिरिशचरितेविस्मयवती|

हराहिभ्योभीतासरसिरुहसौभाग्यजयिनी

सखीषुस्मेरातेमयिजननीदृष्टिःसकरुणा||५१||

*சிவே சங்காரார்த்ரா ததிதரஜனே குத்ஸனபரா*

*ஸரோஷா கங்காயாம் கிரிச சரிதே விஸ்மயவதீ |*

*ஹரா:ப்யோ பீதா ஸரஸிருஹ ஸௌபாக்ய-ஜனனீ*

*ஸகீஷு ஸ்மேரா தே மயி ஜனனி த்ருஷ்டி: ஸகருணா || 51 ||*

*அம்மா ! உன் கண்கள் சதாசிவனிடத்தில் ஸ்ருங்கார ரசமும் , மற்றவர்களிடத்தில் வெறுப்பும் , சிவனின் மற்றொரு மனைவியான கங்கையிடம் கோபமும் , சிவனின் லீலைகளைக் கேட்டு அதனால் ஆச்சர்யமும், அவர் கழுத்தில் உள்ள பாம்பிடம் அச்சமும், நெற்றிக்கண் தாமரை மலர் போல் சிறிது சிவந்து இருப்பதால் வீர ரசத்துடனும், உன் சக தோழிகளிடம் ஹாஸ்யமும் , என்னிடம் மட்டுமே கருணா ரசத்துடனும் , இப்படியாக பல ரசங்களுடன் கூடியதாக இருக்கிறது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *தினங்களுக்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து தேன் ,உளுந்துவடைநிவேதனம் செய்தால் சர்வ ஜன வஷ்யம் ஏற்படும்.*

## 52. ரோக நிவாரணம்

गतेकर्णाभ्यर्णंगरुतइवपक्ष्माणिदधती

पुरांभेत्तुश्चित्तप्रशमरसविद्रावणफले|

इमेनेत्रेगोत्राधरपतिकुलोत्तंसकलिके

तवाकर्णाकृष्टस्मरशरविलासंकलयतः||५२||

கதே கர்ணாப்யர்ணம் கருத இவ பக்ஷ்மாணி தததீ

புராம் பேத்து: சித்தப்ரசம-ரஸ-வித்ராவண பலே |

இமே நேத்ரே கோத்ராதரபதி-குலோத்தம்ஸ-கலிகே

தவாகர்ணாக்ருஷ்ட ஸ்மரசர-விலாஸம் கலயத:|| 52 ||

மலையரசன் பெற்ற மாணிக்கமே ! உன் கண்கள் காதுவரை நீண்டிருக்கிறது . இமை மயிர்கள் அம்பிலிருக்கும் இறகுகள் போல் உள்ளது . இந்தக் கண்களைப் பார்த்தால் காதுவரை இழுத்து விடப்பட்ட மன்மத பாணம் போல் தோன்றுகிறது . இந்தக் அழகிய கண்கள் , மூ உலகத்தையும் எரித்த சிவனுடைய மனதில் சலனத்தை ஏற்ப்படுத்துகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து திலான்னம், பாயசம் நிவேதனம் செய்தால் கண் ,காது ,சம்பந்தமான சகல ரோக நிவாரணம் கிட்டும்.

**53. அம்பாளுடைய நேத்ர ஸௌபாக்ய வர்ணனை**

विभक्तत्रैवर्ण्यंव्यतिकरितलीलाञ्जनतया

विभातित्वन्नेत्रत्रितयमिदमीशानदयिते|

पुनःस्रष्टुंदेवान्द्रुहिणहरिरुद्रानुपरतान्

रजःसत्त्वंबिभ्रत्तमइतिगुणानांत्रयमिव||५३||

விபக்த-த்ரைவர்ண்யம் வ்யதிகரித-லீலாஞ்ஜனதயா

விபாதி த்வன்நேத்ர த்ரிதய மித-மீசானதயிதே |

புன: ஸ்ரஷ்டும் தேவான் த்ரு:ண ஹரி-ருத்ரானுபரதான்

ரஜ: ஸத்வம் பிப்ரத் தம இதி குணானாம் த்ரயமிவ || 53 ||

சிவனின் துணைவியே ! அஞ்சனத்துடன் ( கண் மை ) கூடிய உன் அழகிய மூன்று கண்களும் வெண்மை , சிவப்பு , கறுப்பு , நிறங்களில் உள்ளது . மகா பிரளய காலத்தில் பிரம்மா , விஷ்ணு , ருத்திரன் ஆகிய மூவரும் அழிந்து , உன்னுள் மறைந்திட , அவர்களை மீண்டும் படைப்பதற்காக உன் கண்கள் முக்குணங்களுடன் (சத்வ,ரஜஸ்,தமோ) விளங்குவதாக தோன்றுகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து பால் பாயசம் நிவேதனம் செய்து தீபத்தை வைத்து பூஜை செய்து தேவியின் அருளை பெறலாம்.

**54. யோநி ரோக நிவாரணம்**

पवित्रीकर्तुंनः पशुपतिपराधीनहृदये

दयामित्रैर्नेत्रैररुणधवलश्यामरुचिभिः|

नदः शोणोगङ्गातपनतनयेतिध्रुवममुं

त्रयाणांतीर्थानामुपनयसिसंभेदमनघम्||५४||

பவித்ரீகர்தும் ந: பசுபதி-பராதீன-ஹ்றருதயே

தயாமித்ரைர் நேத்ரை-ரருண-தவல-ச்யாம ருசிபி: |

நத: சோணோ கங்கா தபனதனயேதி த்ருவமும்

த்ரயாணாம் தீர்தானா-முபனயஸி ஸம்பேத-மனகம் || 54 ||

சிவனையே எப்போதும் மனதில் நினைத்திருக்கும் அன்னையே ! உலக மக்களை புனிதமாக்கும் , சிவப்பான சோனா நதி , வெண்மையான கங்கா நதி , கறுப்பான யமுனா நதி , இவைகளின் சங்கமம் போல் இருக்கும் உனது கண்களில் உள்ள சிவப்பு , வெண்மை , கருப்பு , என்ற மூன்று ரேகைகளும் எங்களை புனிதமாக்கவே உன்னால் கருணையுடன் படைக்கப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து குள பாயசம் நிவேதனம் செய்தால் யோநி ரோக நிவாரணம் கிடைக்கும்.

**55. அண்டரோக நிவாரணம்**

निमेषोन्मेषाभ्यांप्रलयमुदयंयातिजगती

तवेत्याहुःसन्तोधरणिधरराजन्यतनये|

त्वदुन्मेषाज्जातंजगदिदमशेषंप्रलयतः

परित्रातुंशङ्केपरिहृतनिमेषास्तवदृशः||५५||

நிமேஷோன்மேஷாப்யாம் ப்ரலயமுதயம் யாதி ஜகதி

தவேத்யாஹு: ஸந்தோ தரணிதர-ராஜன்யதனயே |

த்வதுன்மேஷாஜ்ஜாதம் ஜகதித-மசேஷம் ப்ரலயத:

பரேத்ராதும் சம்ங்கே பரிஹ்றருத-நிமேஷா-ஸ்தவ த்ருச: || 55 ||

அம்மா ! நீ கண்களைத் திறப்பதால் உலகம் தோன்றுவதாகவும் , கண்களை மூடுவதால் அழிந்துவிடுவதாகவும் கற்றறிந்த ஞானிகள் கூறுகின்றனர் . அப்படி நீ கண் திறந்தபோது உண்டான இந்த உலகம் , கண்ணை மூடினால் அழிந்துவிடுமே என்று ( உலக நலத்தை மனதில் எண்ணி ) கருணையுடன் நீ மூடாத கண்களுடன் இருப்பதாக நினைக்கிறேன் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 2500 முறை பாராயணம் செய்து தேங்காய் ,வெற்றிலை பாக்கு பாயசம் , நிவேதனம் செய்தால் அண்ட ரோக நிவாரணம் கிடைக்கும். மேலும் சத்ருவை வெல்லும் திறமை கிடைக்கும்.

**56. பந்த விமோசனம்**

तवापर्णेकर्णेजपनयनपैशुन्यचकिता

निलीयन्तेतोयेनियतमनिमेषाःशफरिकाः|

इयंचश्रीर्बद्धच्छदपुटकवाटंकुवलयम्

जहातिप्रत्यूषेनिशिचविघटय्यप्रविशति||५६||

*தவாபர்ணே கர்ணே ஜபனயன பைசுன்ய சகிதா*

*நிலீயந்தே தோயே நியத மனிமேஷா: சபரிகா: |*

*இயம் ச ஶ்ரீர்பத்தச்சதபுடகவாடம் குவலயம்*

*ஜஹாதி ப்ரத்யூஷே நிஷி ச விகதய்ய ப்ரவிசதி|| 56 ||*

*தாயே ! காதுவரை நீண்ட அழகிய மீன் போன்ற கண்களை உடையவளே ! உன் கண்கள் காதுகளிடம் சென்று தங்களைப் பற்றிக் கோள் சொல்கின்றனவோ என்று பயந்த கறுமையான பெண் மீன்கள் , மூடாத கண்களுடன் தண்ணீரில் ஒளிந்து கொண்டு இருக்கின்றன . உன் கண்களில் உள்ள லக்ஷ்மியும் பகலில் கருங்குவளை மலர்களை விட்டு உன் கண்களிடம் வந்தும் , இரவு நேரத்தில் அம்மலரிடையே சென்று (இரவில் மலர்வதால்) அதன் இதழ்களைத் திறந்து கொண்டு உள்ளே உறைகிறாள் .*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 20000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் பந்த விமோசனம் கிடைக்கும் சங்கிலிபிடியிலிருந்து விடுதலை கிடைக்கும்.

**57. சகல சௌபக்யங்கள் உண்டாகும்**

दृशाद्राघीयस्यादरदलितनीलोत्पलरुचा

दवीयांसंदीनंस्नपयकृपयामामपिशिवे|

अनेनायंधन्योभवतिनचतेहानिरियता

वनेवाहर्म्येवासमकरनिपातोहिमकरः||५७||

த்ருசா த்ராகீயஸ்யா தரதலித நீலோத்பல ருசா

தவீயாம்ஸம் தீனம் ஸ்நபய க்ருபயா மாமபி சிவே |

அனேனாயம் தன்யோ பவதி ந ச தே ஹாநிரியதா

வனே வா ஹர்ம்யே வா ஸமகர நிபாதோ :மகர: || 57 ||

சிவனின் துணைவியே ! சற்றே திறந்திருக்கும் உன்னுடைய அழகிய நீண்ட கருங்குவளை போன்ற கண்கள் என்மீதும் பாரபட்ஷமின்றி கருணைப் பார்வையை வீசட்டும் . அதனால் நானும் பயனடைவேன் . சந்திரன் எப்படி பாரபட்ஷமின்றி காடு , அரண்மனை என்று பாராமல் தன கிரணங்களை வீசுகின்றானோ , அதுபோல் என்மீதும் உன் பார்வை படட்டும் . அதனால் உனக்கு ஒன்றும் குறைந்துவிடாது ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

6 தினங்களுக்கு தினமும் 25000 முறை பாராயணம் செய்து தேன்பாயசம் நிவேதனம் செய்தால் சகல சௌபக்யங்கள் உண்டாகும்.

**58. சகல ஜன வசியம்**

अरालंतेपालीयुगलमगराजन्यतनये

नकेषामाधत्तेकुसुमशरकोदण्डकुतुकम्|

तिरश्चीनोयत्रश्रवणपथमुल्लङ्घ्यविलस-

न्नपाङ्गव्यासङ्गोदिशतिशरसंधानधिषणाम्||५८||

அராலம் தே பாலீயுகல-மகராஜன்யதனயே

ந கேஷா-மாதத்தே குஸுமசர கோதண்ட-குதுகம் |

திரஸ்சீ னோ யத்ர ச்ரவணபத-முல்ல்ங்ய்ய விலஸன்

அபாங்க வ்யாஸங்கோ திசதி சர சந்தான திஷணாம் || 58 ||

தாயே ! மலையரசன் மகளே ! உன்னுடைய கண்களுக்கும் காதுகளுக்கும் மத்தியில் உள்ள இரு வளைவான கன்னங்களைப் பார்த்தால் மன்மதன் வில் என்று, யார்தான் நினைக்க மாட்டார்கள் ? இந்த கன்னங்களில் உன் கடைக்கண் பார்வை காதுகளைத் தாண்டி ஒளிர்வதால் உன் கண்களையே பாணங்களாகக் கொண்ட மன்மதன் பாணங்களைச் செலுத்துவது போல் தோன்றுகிறதே !

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 5000 முறை பாராயணம் செய்து சித்ரான்னம் , தேன் நிவேதனம் செய்தால் சகல ஜன வசியம் மற்றும் சகல ரோக நிவ்ருத்தி ஏற்படும்.

**59. சர்வ ஜன தாச்யப்ப்ரதம்**

स्फुरद्गण्डाभोगप्रतिफलितताटङ्कयुगलं

चतुश्चक्रंमन्येतवमुखमिदंमन्मथरथम्|

यमारुह्यद्रुह्यत्यवनिरथमर्केन्दुचरणं

महावीरोमारःप्रमथपतयेसज्जितवते||५९||

*ஸ்புரத்கண்டாபோக-ப்ரதிபலித தாட்ங்க யுகலம்*

*சது: சக்ரம் மன்யே தவ முகமிதம் மன்மதரதம் |*

*யமாருஹ்ய த்ருஹ்ய த்யவனிரத மர்கேந்துசரணம்*

*மஹாவீரோ மார: ப்ரமதபதயே ஸஜ்ஜிதவதே || 59 ||*

*அம்மா ! கண்ணாடி போன்ற உன் இரு கன்னத்தில் , உன்னுடைய காதிலுள்ள தோடுகள் பிரதிபலிக்கிறது . அதனால் உன் முகம் நான்கு சக்கரங்கள் உள்ள மன்மதனுடைய ரதமாகத் தோன்றுகிறது . இந்த உன் முகமாகிய ரதத்தில் ஏறிக்கொண்டு மன்மதனானவன் , சூர்ய , சந்திரர்களை ரதமாகக் கொண்ட , பூமி என்னும் ரதத்தில் ஏறியிருக்கும் சிவனுடனேயே , போர் புரியத் தயாராக இருக்கும் வீரனாகிறான் .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

3 *தினங்களுக்கு தினமும்* 25000 *முறை பாராயணம் செய்து முத்கான்னம், தேன் நிவேதனம் செய்தால் சர்வ ஜன தாச்யப்ப்ரதம் மற்றும் ஸ்த்ரீ வசியம் ஏற்படும்.*

**60. சகல வித்யாபாரங்கத்வம்**

सरस्वत्याःसूक्तीरमृतलहरीकौशलहरीः

पिबन्त्याःशर्वाणिश्रवणचुलुकाभ्यामविरलम्|

चमत्कारश्लाघाचलितशिरसःकुण्डलगणो

झणत्कारैस्तारैःप्रतिवचनमाचष्टइवते||६०||

ஸரஸ்வத்யா: ஸூக்தீ-ரம்ருதலஹரீ கௌசலஹரீ:

பிப்னத்யா: சர்வாணி ச்ரவண-சுலுகாப்யா-மவிரலம் |

சமத்கார:-ச்லாகாசலித-சிரஸ: குண்டலகணோ

ஜணத்கரைஸ்தாரை: ப்ரதிவசன-மாசஷ்ட இவ தே || 60 ||

சிவனின் துணைவியே ! அமிர்தம் போன்ற இனிமையான உன்னுடைய பேச்சுகளை கல்விக்கு அரசியான சரஸ்வதி , அசையாமல் , இடைவிடாமல் , ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கிறாள் . உன் பேச்சிலுள்ள ரசங்களை அறிந்து , வியப்பினால் , அங்கும் , இங்கும் தலையை அசைத்த வண்ணமே இருக்கும் சரஸ்வதி தேவியின் காதுகளிலுள்ள குண்டலங்கள் , சப்தம் செய்வது , உன் பேச்சுகளை ஆமோதிப்பது போல் இருக்கிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து பால் பாயசம் , தேன் நிவேதனம் செய்தால் சகல வித்யாபாரங்கத்வம் மற்றும் வாக்பலிதம் உண்டாகும்.

### 61. சகல கார்ய ஜெயம்

असौनासावंशस्तुहिनगिरिवंशध्वजपटि

त्वदीयोनेदीयःफलतुफलमस्माकमुचितम्|

वहन्नन्तर्मुक्ताःशिशिरतरनिश्वासगलितं

समृद्ध्यायत्तासांबहिरपिचमुक्तामणिधरः||६१||

அஸௌ நாஸாவம்சஸ் து:னகிரிவம்ச-த்வஜபடி

த்வதீயோ நேதீய: பலது பல-மஸ்மாகமுசிதம் |

வஹத்யன்தர்முக்தா: சிசிரதரனிஸ்சாஸ-கலிதம்

ஸம்ருத்த்யா யத்தாஸாம் ப:ரபி ச முக்தாமணிதர: || 61 ||

அம்மா ! முத்துக்கள் நிறைந்ததாகக் கூறப்படும் இளமூங்கில் போல் இருக்கும் உன்னுடைய மூக்கிலிருந்து , நீ வெளிவிடும் மூச்சுக் காற்றிலிருந்து , வெளிவரும் ஒரு முத்து மணியானது , நீ அணிந்திருக்கும் முத்து மூக்குத்தியாக ஆனது போல் தோன்றுகிறது . அந்த முத்து மூக்குத்தியானது எங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் தரட்டும் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

8 தினங்களுக்கு தினமும் 12000 முறை பாராயணம் செய்து முத்கான்னம் , தேங்காய்,பழம் தேன் நிவேதனம் செய்தால் சகல கார்யங்களிலும் ஜெயம் உண்டாகும்.

62. நித்ராப்தம் ,கார்யசித்தி

प्रकृत्यारक्तायास्तवसुदतिदन्तच्छदरुचेः

प्रवक्ष्येसादृश्यंजनयतुफलंविद्रुमलता|

नबिम्बंतद्बिम्बप्रतिफलनरागादरुणितं

तुलामध्यारोढुंकथमिवविलज्जेतकलया||६२||

ப்ரக்ருத்யா ரக்தாயா-ஸ்தவ ஸுததி தன்தச்சதருசே:

ப்ரவக்ஷ்யே ஸாத்ருஷ்யம் ஜனயது பலம் வித்ருமலதா |

ந பிம்பம் தத்பிம்ப-ப்ரதிபலன-ராகா-தருணிதம்

துலாமத்ராரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா || 62 ||

தாயே ! அழகிய பல் வரிசை கொண்டவளே ! உன்னுடைய அழகான சிவந்த உதட்டிற்கு ஈடாக எதையும் கூற முடியாது . ஒரு சமயம் பவழக்கொடி பழம் தந்தால் , அது ஈடாகலாம் . கோவைப் பழம் கூட , உன்னுடைய சிவந்த உதட்டின் நிறத்தைப் பிரதிபலிப்பது போல் இருப்பதால் , அது துளி அளவு கூட சமமாக முடியாமல் , வெட்கப்படுகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

8 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து மாஷான்னம் நிவேதனம் செய்தால் நித்ராப்தம் மற்றும் கார்யங்களிலும் ஜெயம் உண்டாகும்.

**63. *சர்வ ஜன சம்மோஹனம்***

स्मितज्योत्स्नाजालंतववदनचन्द्रस्यपिबतां

चकोराणामासीदतिरसतयाचञ्चुजडिमा|

अतस्तेशीतांशोरमृतलहरीमम्लरुचयः

पिबन्तिस्वच्छन्दंनिशिनिशिभृशंकाञ्जिकधिया||६३||

*ஸ்மிதஜ்யோத்ஸ்னாஜாலம் தவ வதனசன்த்ரஸ்ய பிபதாம்*

*சகோராணா-மாஸீ-ததிரஸதயா சஞ்சு-ஜடிமா* |

*அதஸ்தே சீதாம்சோ-ரம்ருதலஹரீ மாம்லருசய:*

*பிபன்தீ ஸ்வச்சன்தம் நிசி நிசி பிருஷம் காஞ்ஜி கதியா* || 63 ||

*தாயே ! உன் நிலவு போன்ற முகத்தில் உள்ள இனிமையான ஒளிமயமான புன்னகையை , நிலவு ஒளி என்று நினைத்துக் குடித்த சகோரபட்சிகள் , உன் அமிர்தம் போன்ற இனிமை ஒளியால் திகட்டல் கொண்டு , அதை மாற்றிக்கொள்ள நினைத்து , சந்திரனுடைய அமிர்த ஒளிக்கிரணங்களை , புளித்த கஞ்சியாக எண்ணி அதை இரவு நேரத்தில் குடிக்கின்றன .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்*:**

30 *தினங்களுக்கு தினமும்* 30000 *முறை பாராயணம் செய்து தத்யன்னம், தேன், பழம், தேங்காய் நிவேதனம் செய்தால் சர்வ ஜன சம்மோஹனம் உண்டாகும்.*

64. சகல ரோக நிவாரணம்

अविश्रान्तंपत्युर्गुणगणकथाम्रेडनजपा

जपापुष्पच्छायातवजननिजिह्वाजयतिसा|

यदग्रासीनायाःस्फटिकदृषदच्छच्छविमयी

सरस्वत्यामूर्तिःपरिणमतिमाणिक्यवपुषा||६४||

அவிச்ராந்தம் பத்யுர்குணகண கதாம்ரேடனஜபா

ஜபாபுஷ்பச்சாயா தவ ஜனனி ஜிஹ்வா ஜயதி ஸா |

யதக்ராஸீனாயா: ஸ்படிகத்ருஷ-தச்சச்சவிமயி

ஸரஸ்வத்யா மூர்தி: பரிணமதி மாணிக்யவபுஷா || 64 ||

அம்மா ! கற்புக்கரசியான நீ , எப்பொழுதும் உன் கணவனின் பெருமைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வதால் , புனிதமான உன் நாக்கு , செம்பருத்திப் பூவைப் போல் சிவந்த நிறமாகவே இருக்கிறது . உன் நாவின் நுனியில் இருக்கும் வாணியின் சுத்த வெண்மை நிறமானது , மாணிக்கம் போல் சிவந்த நிறமாகவே மாறிவிட்டது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

18 தினங்களுக்கு தினமும் 25000 முறை பாராயணம் செய்து குளபாயசம் நிவேதனம் செய்தால் ஸ்திரீகளுக்கு சகல ரோகநிவரணம் மற்றும் சகல முகவஷ்யம் ஏற்படும், மேலும் சகல கார்ய சித்தி உண்டாகும்.

## 65. ஜயம்

रणेजित्वादैत्यानपहृतशिरस्त्रैःकवचिभिर्-

निवृत्तैश्चण्डांशत्रिपुरहरनिर्माल्यविमुखैः|

विशाखेन्द्रोपेन्द्रैःशशिविशदकर्पूरशकला

विलीयन्तेमातस्तववदनताम्बूलकबलाः||६५||

*ரணே ஜித்வா தைத்யா நபஹ்ருத-சிரஸ்த்ரை: கவசிபி:*

*நிவ்ருத்தை:-சண்டாம் சத்ரிபுரஹர-நிர்மால்ய-விமுகை:* |

*விசாகேன்த்ரோபேன்த்ரை: சசிவிசத-கர்பூரசகலா*

*விலீயன்தே மாதஸ்தவ வதனதாம்பூல-கபலா:* || 65 ||

தேவீ ! அசுரர்களுடன் போர் செய்து திரும்புகின்ற முருகன் , விஷ்ணு , இந்திரன் ஆகியோர் தங்களுடைய வெற்றியை உன்னிடம் தெரிவிக்க வருகின்றபோது , அவிழ்த்துவைக்கப்பட்ட தலைப்பாகையை கையிலும் , அவிழ்க்காத கவசங்களுடனும் உன்னை வணங்கி , சண்டிகேஸ்வரருக்குச் சொந்தமான சிவ நிர்மால்யத்தை மதிக்காமல் , நீ வாயில் மென்று தருகின்ற பச்சைக் கற்பூரத்துடன் கூடிய தாம்பூலக் கவளங்களை ஆசையுடனும் , பக்தியுடனும் மென்று சாப்பிடுகிறார்கள் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் சகலமும் ஜெயம் உண்டாகும்.

**66. சங்கீத ப்ரதம்.**

विपञ्च्यागायन्तीविविधमपदानंपशुपतेः

त्वयारब्धेवक्तुंचलितशिरसासाधुवचने|

तदीयैर्माधुर्यैरपलपिततन्त्रीकलरवां

निजांवीणांवाणीनिचुलयतिचोलेननिभृतम्||६६||

*விபஞ்ச்யா காயந்தீ விவித-மபதானம் பசுபதே-*

*ஸ்த்வயாரப்தே வக்தும் சலித சிரஸா ஸாதுவசனே |*

*ததீயை-ர்மாதுர்யை-ரபலபித-தந்த்ரீகலரவாம்*

*நிஜாம் வீணாம் வாணீம் நிசுலயதி சோலேன நிருப்தம் || 66 ||*

*தாயே ! சரஸ்வதியானவள் , சிவனுடைய புகழைத் தன்னுடைய வீணையில் இசைக்க , நீயும் மனமகிழ்ந்து , ஆகா ! என்று , அதனைப் புகழ , உன் இனிமையான குரல் வீணையின் ஒலிதனைப் பழிப்பதுபோல் இருப்பதைக் கேட்டு,வெட்கமடைந்த கலைவாணி , வீணையை உறைத்துணியால் நன்றாக மறைகின்றாளே !*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

3 *தினங்களுக்கு தினமும்* 5000 *முறை பாராயணம் செய்து குடான்னம் நிவேதனம் செய்தால் வீணை முதலிய அனைத்து சங்கீத ப்ரதம்.கிட்டும் .மேலும் அனைத்து ரோக நிவ்ருத்தி ஏற்படும்.*

**67. ராஜ வச்யம்**

करग्रेणस्पृष्टंतुहिनगिरिणावत्सलतया

गिरीशेनोदस्तंमुहुरधरपानाकुलतया|

करग्राह्यंशम्भोर्मुखमुकुरवृन्तंगिरिसुते

कथङ्कारंब्रूमस्तवचिबुकमौपम्यरहितम्||६७||

கரக்ரேண ஸ்ப்ருஷ்டம் து:னகிரிணா வத்ஸலதயா

கிரிசேனோ-தஸ்தம் முஹு ரதரபானாகுலதயா |

கரக்ராஹ்யம் சம்போர்முகமுகுரவ்ருந்தம் கிரிஸுதே

கதம்கரம் ப்ரூம-ஸ்தவ சுபுகமோபம்யர:தம் || 67 ||

தாயே ! மலையரசன் குலவிளக்கே ! உன் தந்தையால் உனது முகவாயும் அளவற்ற பாசத்தினால் கைவிரல் நுனியால் தொடப்பட்டதும் , உன் கணவனாகிய சிவனின் கைகளால் அதர பானம் செய்யும் நினைவுடன் அடிக்கடி உயரத்தூக்கப் பட்டதுமான , உன் ஈடு இணையற்ற முகவாயானது , உன்னுடைய முகமாகிய கண்ணாடிக்கு பிடி போல் இருக்கிறது . இந்த அழகான முகவாயை நான் எப்படி வருணிப்பேன் ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து க்ஷீர பாயசம் மற்றும் தாம்பூலம் நிவேதனம் செய்தால் ராஜ வச்யம், தேவி பிரசன்னத்தை சிந்தித்த கார்ய சித்தி ஏற்படும்.

**68. தேவி பிரசன்னம்**

भुजाश्लेषान्नित्यंपुरदमयितुःकण्टकवती

तवग्रीवाधत्तेमुखकमलनालश्रियमियम्|

स्वतःश्वेताकालागुरुबहुलजम्बालमलिना

मृणालीलालित्यम्वहतियदधोहारलतिका||६८||

புஜா: ச்லேஷாந்நித்யம் புரதமயிது: கன்டகவதீ

தவ க்ரீவா தத்தே முககமலனால-ஷ்ரியமியம் |

ஸ்வத: ச்வெதா காலா கரு பஹுல-ஜம்பாலமலினா

ம்ருணாலீலாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா || 68 ||

அம்மா ! சிவன் உன்னை எப்போதும் தழுவுவதால் ஏற்படும் மயிர்க்கூச்சலினால் முள்ளு முள்ளாகத் தோன்றும் உன் கழுத்து , உன் முகமான தாமரைக்கு , முள் கூடிய தாமரைத் தண்டு போல் தோன்றுகிறது . உன் கழுத்திலுள்ள வெண்முத்து மாலையானது , உன் கழுத்தில் பூசப்பட்ட அகருவினால் , கறுமை நிறம் அடைந்து , சேற்றில் உள்ள தாமரைக் கொடிபோல் தோன்றுகிறதே !

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

இந்த ஸ்லோகத்தை குரு மூலமாகதான் அனுஷ்டிக்கபடவேண்டும் என பக்தர்களிடம் கேட்டுகொள்ளபடுகிறது.

**69. *ஸர்வ கார்ய சித்தி***

गलेरेखास्तिस्रोगतिगमकगीतैकनिपुणे

विवाहव्यानद्धप्रगुणगुणसंख्याप्रतिभुवः|

विराजन्तेनानाविधमधुररागाकरभुवां

त्रयाणांग्रामाणांस्थितिनियमसीमानइवते||६९||

*கலே ரேகாஸ்திஸ்ரோ கதி கமக கீதைக நிபுணே*

*விவாஹ-வ்யானத்த-ப்ரகுணகுண-ஸம்க்யா ப்ரதிபுவ: |*

*விராஜந்தே நானாவித-மதுர-ராகாகர-புவாம்*

*த்ரயாணாம் க்ராமாணாம் ஸ்திதி-நியம-ஸீமான இவ தே || 69 ||*

*அம்மா ! கதி ,கமகம் ,கீதம் என்ற இசையில் வல்லவளே ! உன் கழுத்திலுள்ள முன்று ரேகைகளும், சிவன் உனக்கு திருமணநாள் அன்று அணிவித்த மங்கள சூத்திரத்தின் அடையாளம் போலும் . இனிமையான சங்கீதத்திற்கு ஆதாரமான சட்ஜம் ,மத்யமம் ,காந்தாரம் என்ற இவைகளின் அடிப்படைகளைக் காட்டும் எல்லைகள் போல் விளங்குகிறது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *தினங்களுக்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து தேங்காய், பழம்,வெற்றிலை, பாக்கு மற்றும் தேன் நிவேதனம் செய்தால் கார்ய சித்தி ஏற்படும்.*

**70. *கார்ய ஜய ப்ரதம்***

मृणालीमृद्वीनांतवभुजलतानांचतसृणां

चतुर्भिःसौन्दर्यंसरसिजभवःस्तौतिवदनैः|

नखेभ्यःसन्त्रस्यन्प्रथममथनादन्धकरिपो-

श्चतुर्णांशीर्षाणांसममभयहस्तार्पणधिया||७०||

*ம்ருணாலீ-ம்ருத்வீனாம் தவ புஜலதானாம் சதஸ்ருணாம்*

*சதுர்பி: ஸௌந்தர்யம் ஸரஸிஜபவ: ஸ்தௌதி வதனை: |*

*நகேப்ய: ஸந்த்ரஸ்யன் ப்ரதம-மதனா தன்தகரிபோ:*

*சதுர்ணாம் சீர்ஷாணாம் ஸம-மபயஹஸ்தார்பண-தியா || 70 ||*

*தாயே ! அபயாம்பிகா ! ஒரு சமயம் பிரம்மாவினுடைய ஐந்தாவது தலையை சிவனும் கிள்ளியதால், அவருடைய விரல் நகங்களுக்கு பயந்து நடுங்கிய பிரம்மா , உன்னிடம் சரண் அடைந்து , தன்னுடைய நான்கு தலைகளுக்கும் ஒரே நேரத்தில் உன் நான்கு கைகளால் அபயம் கிடைக்கும் என்று எண்ணி , உன்னுடைய மென்மையான தாமரைக் கோடி போன்ற நான்கு கைகளின் அழகினைத் தன் நான்கு முகங்களினாலும் புகழ்கிறார்.*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து ஹரித்ரான்னம் ,தாம்பூலம் நிவேதனம் செய்தால் அனைத்து கார்யதிலும் ஜெயம் உண்டாகும்.

**71. யக்ஷிணி வச்யம்**

नखानामुद्द्योतैर्नवनलिनरागंविहसतां

कराणांतेकान्तिंकथयकथयामःकथमुमे|

कयाचिद्वासाम्यंभजतुकलयाहन्तकमलं

यदिक्रीडल्लक्ष्मीचरणतललाक्षारसछणम्||७१||

நகானாமுத்யோதைர் நவனலினராகம் விஹஸதாம்

கராணாம் தே காந்திம் கதய கதயாம: கதமுமே |

கயாசித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்

யதி க்ரீடல்லக்ஷ்மீ-சரணதல-லாக்ஷாரஸ-சணம் || 71 ||

அம்மா ! உமா தேவீ ! புதிதாக மலர்ந்த தாமரைப் பூவின் ஒளியைவிட பிரகாசமான உன் கைவிரல் நகப் பொலிவை நாங்கள் எப்படி வருணிக்கமுடியும் ? செந்தாமரைப்பூவிற்கு , அதில் வாழ்கின்ற லக்ஷ்மி தேவியின் சரணங்களில் இருக்கும் மருதாணியால் தானே அந்த ஒளி கிடைத்தது . அந்த பிரகாசமானது உன் கரங்களின் அழகில் ஏதோ ஒரு சாயல் போல் ஆகுமே !

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 12000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் யக்ஷிணி வச்யம் அமையும்.

**72. சகல பய நிவ்ருத்தி.**

समंदेविस्कन्दद्विपवदनपीतंस्तनयुगं

तवेदंनःखेदंहरतुसततंप्रस्नुतमुखम्|

यदालोक्याशङ्काकुलितहृदयोहासजनकः

स्वकुम्भौहेरम्बःपरिमृशतिहस्तेनझडिति||७२||

ஸமம் தேவி ஸ்கந்த த்விபிவதன பீதம் ஸ்தனயுகம்

தவேதம் ந: கேதம் ஹரது ஸததம் ப்ரஸ்னுத-முகம் |

யதாலோக்யாசங்காகுலித ஹ்றருதயோ ஹாஸஜனக:

ஸ்வகும்பௌ ஹேரம்ப: பரிம்ருசதி ஹஸ்தேன ஜடிதி || 72 ||

தேவீ ! உன்னுடைய பிள்ளைகளான கணபதி , கந்தன் இருவராலும் ஒரே நேரத்தில் பருகப்பட்ட உன் ஸ்தனங்களின் பருமனைக் கண்ட கணபதி , தன் தலையிலுள்ள கும்பங்களை நீ அபகரித்து , உன் ஸ்தனங்களாக வைத்துக் கொண்டாயோ என்று , குழந்தைத் தனமாக நினைத்து தன் தலையில் கும்பம் இருக்கிறதா , என்று தலையைத் தடவிப் பார்க்கிறார் . அதைப் பார்த்த தாய் , தந்தையாரான நீங்கள் , சிரித்தீர்களே ! அந்த பெருமையுடைய உன் ஸ்தனங்கள் எங்களுடைய துன்பத்தைப் போக்கட்டுமே !

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் சகல பய நிவ்ருத்தி கிட்டும்.

**73. க்ஷீர சம்ருத்தி**

अमूतेवक्षोजावमृतरसमाणिक्यकुतुपौ

नसंदेहस्पन्दोनगपतिपताकेमनसिनः|

पिबन्तौतौयस्मादविदितवधूसङ्गरसिकौ

कुमारावद्यापिद्विरदवदनक्रौञ्चदलनौ||७३||

*அமூ தே வக்ஷோஜா-வம்ருதரஸ-மாணிக்ய குதுபௌ*

*ந ஸன்தேஹஸ்பந்தோ நகபதி பதாகே மனஸி ந: |*

*பிபந்தௌ தௌ யஸ்மாதவிதித வதூஸங்க ரஸிகௌ*

*குமாராவத்யாபி த்விரதவதன-க்ரௌஞ்ச்தலனௌ || 73 ||*

*அம்மா ! உன் ஸ்தனங்கள் அமிர்தம் நிரம்பிய மாணிக்ய குடுவைகள் . பாலுள்ள ஸ்தானமாக இருந்திருந்தால் கணபதியும் , கந்தனும் குழந்தை வயதினைத் தாண்டி பருவத்தின் முதிர்ச்சியை அடைந்திருப்பார்களே ! அந்த ஸ்தனங்களில் இருந்து அமிர்தத்தைப் பருகியதால் தான் கணபதியும் கந்தனும் பால்ய வயதினைத் தாண்டாமல் மங்கையர் சம்பந்தம் இல்லாத குழந்தைகளாகவே இருக்கின்றனர் .*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

8 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் க்ஷீர சம்ருத்தி ஏற்படும்.

**74. கீர்திப்ரதம்**

वहत्यम्बस्तम्बेरमदनुजकुम्भप्रकृतिभिः

समारब्धांमुक्तामणिभिरमलांहारलतिकाम्|

कुचाभोगोबिम्बाधररुचिभिरन्तःशबलितां

प्रतापव्यामिश्रांपुरदमयितुःकीर्तिमिवते||७४||

வஹத்யம்ப ஸ்த்ம்பேரம-தனுஜ-கும்பப்ரக்ருதிபி:

ஸமாரப்தாம் முக்தாமணிபிரமலாம் ஹாரலதிகாம் |

குசாபோகோ பிம்பாதர-ருசிபி-ரந்த: சபலிதாம்

ப்ரதாப-வ்யாமிஸ்ராம் புரதமயிது: கீர்திமிவ தே || 74 ||

தாயே ! பரமேஸ்வரி ! நீ கஜாசுரனை வதம் செய்து அவன் கும்பத்திலிருந்து உண்டான பல நிறங்கள் உள்ள முத்து மாலையை உன் ஸ்தனங்களின் மத்தியில் அணிந்திருக்கிறாய் . அந்த பல நிறமுடைய முத்தானது , உன் சிவந்த உதட்டின் ஒளி வீசி , வெளிப்புறம் சிவப்பாகவும் , உட்புறம் பலவர்ணங்களோடும் விளங்குகிறது . இந்த முத்து மாலையானது மூ உலகையும் எரித்த பரமசிவனது வெற்றி மாலையாகத் தோன்றுகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

3 தினங்களுக்கு தினமும்108 முறை பாராயணம் செய்து க்ஷீரபாயசம் நிவேதனம் செய்தால் கீர்திப்ரதம் ஏற்படும்.

**75. கவன சித்தி ப்ராப்தம்**

तवस्तन्यंमन्येधरणिधरकन्येहृदयतः

पयःपारावारःपरिवहतिसारस्वतमिव|

दयावत्यादत्तंद्रविडशिशुरास्वाद्यतवयत्

कवीनांप्रौढानामजनिकमनीयःकवयिता||७५||

*தவ ஸ்தன்யம் மன்யே தரணிதரகன்யே ஹ்ருதயத:*

*பய: பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ |*

*தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு-ராஸ்வாத்ய தவ யத்*

*கவீனாம் ப்ரௌடானா மஜனி கமனீய: கவயிதா || 75 ||*

*அம்மா ! உன் ஸ்தனங்களிலிருந்து பெருகும் பால் இதயத்திலிருந்து பெருகும் பாற்கடல் . கலைவாணியே அந்தப் பாலாக உருவெடுத்தது போல் தோன்றுகிறது . உன்னால் கருணையுடன் தரப்பட்ட , பாலைக் குடித்த திராவிட நாட்டுக் குழந்தை ஒருவன் கற்றறிந்தோர் போற்றும் பெருங்கவிஞ்சனாக ஆகிவிட்டான் அன்றோ ?*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*3 தினங்களுக்கு தினமும் 12000 முறை பாராயணம் செய்து தேன், முத்கான்னம், பழம் நிவேதனம் செய்தால் கவன சித்தி ப்ராப்தம் ஏற்படும்.*

**76. *சகல கார்ய ஜயம்***

हरक्रोधज्वालावलिभिरवलीढेनवपुषा

गभीरेतेनाभीसरसिकृतसङ्गोमनसिजः|

समुत्तस्थौतस्मादचलतनयेधूमलतिका

जनस्तांजानीतेतवजननिरोमावलिरिति||७६||

*ஹரக்ரோத-ஜ்வாலாவலிபி-ரவலீடேன வபுஷா*

*கபீரே தே நாபீஸரஸி க்ருதஸங்கோ மனஸிஜ: |*

*ஸமுத்தஸ்தௌ தஸ்மாதசலதனயே தூமலதிகா*

*ஜனஸ்தாம் ஜானீதே தவ ஜனனி ரோமாவலிரிதி || 76 ||*

*அன்னையே ! பரமசிவனுடைய கோபத்தினால் அவரது நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதன் , அந்த நெருப்பின் வெப்பம் தாளமுடியாமல் , அதிலிருந்து விடுபடுவதற்காக , குளுமையான தடாகம் போன்ற , ஆழமான உன்னுடைய தொப்புள் குழியில் குதித்தான் . தடாகத்தில் , நெருப்புடன் குதித்ததால் உண்டான புகையை , உன் நாபியைச் சுற்றிய ரோமங்களாக நினைக்கின்றனர்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

10 *தினங்களுக்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து தத்யான்னம், தேங்காய், பழம் நிவேதனம் செய்தால் சகல கார்யதிலும் ஜெயம் நிச்சயம் ஏற்படும்.*

**77. சர்வ ஜன வஷ்யம்**

यदेतत्कालिन्दीतनुतरतरङ्गाकृतिशिवे

कृशेमध्येकिंचिज्जननितवयद्भातिसुधियाम्|

विमर्दादन्योऽन्यंकुचकलशयोरन्तरगतं

तनूभूतंव्योमप्रविशदिवनाभिंकुहरिणीम्||७७||

யதேதத்காலின்தீ-தனுதர-தரங்காக்ருதி சிவே

க்ருசே மத்யே கிஞ்சிஜ்ஜனனி தவ யத்பாதி ஸுதியாம் |

விமர்தா-தன்யோன்யம் குசகலசயோரந்தர கதம்

தனூபூதம் வ்யோம ப்ரவிசதிவ நாபிம் குஹரிணீம் || 77 ||

அம்மா ! தியானிகளுக்கு மட்டுமே புலப்படக்கூடிய உன் சிறு இடுப்பில் , யமுனை நதியின் கறுமையான மெல்லிய அலை போன்ற , உன்னுடைய ரோமவரிசை , தொப்புள் குழியில் முடிவடைகிறது . அதைப் பார்த்தால் நீல வானமானது உன் பருத்த கலசங்கள் போன்ற இரு ஸ்தனங்களுக்கு இடையே அகப்பட்டு அதனுடைய அழுத்தத்தினால் , எங்கே தான் அழிந்து விடுவோமோ என்று பயந்து , மெல்லியதாக ஆகி ,தொப்புள் குழியினுள் செல்வது போல் தோன்றுகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

15 தினங்களுக்கு தினமும் 2000 முறை பாராயணம் செய்து தேன், பழம் நிவேதனம் செய்தால் சர்வ ஜன வஷ்யம் ஏற்படும்.

**78. ராஜ வச்யம்**

स्थिरोगङ्गावर्तःस्तनमुकुलरोमावलिलता-

कलावालंकुण्डंकुसुमशरतेजोहुतभुजः|

रतेर्लीलागारंकिमपितवनाभिर्गिरिसुते

बिलद्वारंसिद्धेर्गिरिशनयनानांविजयते||७८||

ஸ்திரோ கங்கா வர்த: ஸ்தனமுகுல-ரோமாவலி-லதா

கலாவாலம் குண்டம் குஸுமசர தேஜோ-ஹுதபுஜ: |

ரதேர்லீலாகாரம் கிமபி தவ நாபிர் கிரிஸுதே

பேலத்வாரம் ஸித்தேர் கிரிசனயநாநாம் விஜயதே || 78 ||

தாயே ! உன் தொப்புள் இருக்கும் இடமானது , அமைதியான கங்கை நதியின் சுழல் போன்றது. உன் ஸ்தனமாகிய தாமரை மொட்டுக்களைச் சுமக்கின்ற உனது ரோமங்களாகிய கொடியின் வேர்களுக்கு , பாத்தி போன்றது . மன்மதனின் ஒளியான நெருப்பிற்கு ஹோமகுண்டம் போன்றது . மன்மதனின் மனைவியான ரதிக்கு விளையாடும் இடமானது. பரமசிவனின் தவ உயர்விற்கு சித்தி அடையும் குகை வழி போன்றது. இது போன்று ஆழம் தெரியாத உன் தொப்புளின் அழகு , வருணனைக்கு அப்பாற்ப்பட்டதன்றோ ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 108 முறை பாராயணம் செய்து முத்கான்னம், மாஷாபூபம் நிவேதனம் செய்தால் ராஜ வஷ்யம் மற்றும் ஜெயம் ஏற்படும்.

**79. வித்யாப்ரதம்**

निसर्गक्षीणस्यस्तनतटभरेणक्लमजुषो

नमन्मूर्तेर्नारीतिलकशनैस्त्रुट्यतइव|

चिरंतेमध्यस्यत्रुटिततटिनीतीरतरुणा

समावस्थास्थेम्नोभवतुकुशलंशैलतनये||७९||

நிஸர்க-க்ஷீணஸ்ய ஸ்தனதட-பரேண க்லமஜுஷோ

நமன்மூர்தேர் நாரீதிலக சனைஸ்த்ருட்யத இவ |

சிரம் தே மத்யஸ்ய த்ருடித தடினீ-தீர-தருணா

ஸமாவஸ்தா-ஸ்தேம்னோ பவது குசலம் சைலதனயே || 79 ||

அம்மா ! இயற்கையில் மெல்லியதான உன் இடுப்பு , உன் இரு பருத்த ஸ்தனங்களின் பாரத்தைத் தாங்க முடியாமல் , கொஞ்சம் முன்புறம் சாய்ந்து இருப்பதைப் பார்த்தால் , ஒடிந்து விழுந்து விடுமோ , என்று தோன்றுகிறது . தண்ணீருள்ள ஆற்றின் கரையிலுள்ள மரமானது , கீழே விழுந்துவிடும் போல் சாய்வாக இருந்தாலும் , எவ்வளவு உறுதியாக இருக்குமோ , அதுபோல் உன் இடுப்பிற்கு எந்த ஆபத்தும் வராமல் ( ஒடிந்துவிடாமல் ) , நீண்டகாலம் நன்றாக இருக்கப் பிரார்த்திக்கிறேன் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து க்ஷீரபாயசம்,தேன் நிவேதனம் செய்தால் ஐந்தர ஜால வித்யப்ரதம் கிட்டும் மேலும் சர்வஜன சம்மோகன ப்ராப்தி கிடைக்கும்.

**80. வித்யாப்ரப்தி**

कुचौसद्यःस्विद्यत्तटघटितकूर्पासभिदुरौ

कषन्तौदोर्मूलेकनककलशाभौकलयता|

तवत्रातुंभङ्गादलमितिवलग्नंतनुभुवा

त्रिधानद्धंदेविित्रिवलिलवलीवल्लिभिरिव||८०||

குசௌ ஸத்ய: ஸ்வித்யத் தடகடித-கூர்பாஸபிதுரௌ

கஷந்தௌ-தொர்மூலே கனககலசாபௌ கலயதா |

தவ த்ராதும் பங்காதலமிதி வலக்னம் தனுபுவா

த்ரிதா நத்த்ம் தேவீ த்ரிவலி லவலீவல்லிபிரிவ || 80 ||

தேவீ ! உன் பதியான பரமேஸ்வரனின் பெருமைகளை , நீ, நினைத்து , நினைத்து மகிழ்வதால் , உன் தங்கக்கலசம் போன்ற ஸ்தனங்கள் , அடிக்கடி வியர்த்து , பூரிப்பதால் , மன்மதன் , இந்த ஸ்தன சுமையினால் உன் இடுப்பு ஒடிந்து விழுந்துவிடப் போகிறதே என்று , உன் இடுப்பை வள்ளிக் கொடிகளால் மூன்று சுற்றாக சுற்றி இருப்பது போல் தோன்றுகிறது (இடுப்பிலுள்ள மூன்று சதை மடிப்புகளின் அழகு ).

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் மஹேந்திர ஜால வித்யப்ரதம் கிட்டும்.

**81. *அக்னி ச்தம்பனப்ரதம்***

गुरुत्वंविस्तारंक्षितिधरपतिःपार्वतिनिजा-

न्नितम्बादाच्छिद्यत्वयिहरणरूपेणनिदधे|

अतस्तेविस्तीर्णोगुरुरयमशेषांवसुमतीं

नितम्बप्राग्भारःस्थगयतिलघुत्वंनयतिच||८१||

*குருத்வம் விஸ்தாரம் க்ஷிதிதரபதி: பார்வதி நிஜாத்*

*நிதம்பாதாச்சித்ய த்வயி ஹரண ரூபேண நிததே |*

*அதஸ்தே விஸ்தீர்ணோ குருரயமசேஷாம் வஸுமதீம்*

*நிதம்ப-ப்ராக்பார: ஸ்தகயதி ஸகுத்வம் நயதி ச* || 81 ||

*தேவீ ! பார்வதி ! உன்னுடைய பின்பாகமானது ( நிதம்பம் ) பருத்து , அகலமாக இருப்பதால், இந்த பூமியையே மறைத்து , அதை லேசாக இருப்பது போல் செய்கிறது . இதைப் பார்த்தால் இந்த பருமனும் , அகலமும் உன் தந்தையான பர்வதராஜன் தன்னுடைய அடிவாரத்திலிருந்து உனக்கு அளித்த ஸ்ரீதன சீர்வரிசை போல் தோன்றுகிறது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்*:**

16 *தினங்களுக்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து குடபாயசம், மாஷாபூபம் நிவேதனம் செய்தால் அக்னி ச்தம்பனப்ரதம் கிடைக்கும்.*

**82. ஜலஸ்தம்பன ப்ரதம்**

करीन्द्राणांशुण्डान्कनककदलीकाण्डपटली-

मुभाभ्यामूरुभ्यामुभयमपिनिर्जित्यभवती|

सुवृत्ताभ्यांपत्युःप्रणतिकठिनाभ्यांगिरिसुते

विधिज्ञ्येजानुभ्यांविबुधकरिकुम्भद्वयमसि||८२||

*கரீந்த்ராணாம் சுண்டான்-கனககதலீ-காண்டபடலீம்*

*உபாப்யாமூருப்யாமுபயமபி நிர்ஜித்ய பவதி |*

*ஸுவ்ருத்தாப்யாம் பத்யு: ப்ரணதிகடினாப்யாம் கிரிஸுதே*

*விதிஜ்ஞே ஜானுப்யாம் விபுத கரிகும்ப த்வயமஸி || 82 ||*

*அம்மா ! வேதநாயகியே ! உன்தொடைகள் இரண்டும் , யானைகளின் துதிக்கைகளையும் , தங்கமயமான வாழைமரத் தண்டுகளையும் விட , மிக அழகாக இருக்கின்றன . உன் முழங்கால்கள் உருண்டையாகவும் , உன் கணவனாகிய பரமசிவனை , அடிக்கடி வணங்குவதால் சற்று கடினமாகவும் உள்ள அந்த முழங்கால்களால் , ஐராவதத்தின் தலையில் உள்ள கும்பங்களை நீ வெற்றி கொண்டாயே !*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *தினங்களுக்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து தேன், திராக்ஷ பழம் நிவேதனம் செய்தால் ஜலஸ்தம்பன ப்ரதம் கிடைக்கும்.*

**83. சைந்ய ஸ்தம்பனம்**

पराजेतुंरुद्रंद्विगुणशरगर्भौगिरिसुते

निषङ्गौजङ्घेतेविषमविशिखोबाढमकृत|

यदग्रेदृश्यन्तेदशशरफलाःपादयुगली-

नखाग्रच्छद्मानःसुरमकुटशाणैकनिशिताः||८३||

*பராஜேதும் ருத்ரம் த்விகுணசர கர்பௌ கிரிஸுதே*

*நிஷங்கௌ ஜங்கே தே விஷமவிசிகோ பாட-மக்ருத |*

*யதக்ரே த்ருஸ்யன்தே தச சரபலா: பாதயுகலீ*

*நகாக்ரச்சந்மான: ஸுர முகுட-சாணைக-நிசிதா: || 83 ||*

*தாயே ! உன்னுடைய கனுக்கால்கள், பரமசிவனை வெற்றி கொள்வதற்காக , மன்மதனால் தயாரிக்கப்பட்ட அம்பராத்துணிபோல் தோன்றுகிறது . தன்னுடைய ஐந்து பாணங்கள் போதாமல் , உன் கால் பத்து விரல்களையும் , பத்து பாணங்களாகப் படைத்தான் . அந்த அம்பராத்துணிகளின் முன்பாகத்தில் தெரிகின்ற உன் கால் விரல்களின் நகங்கள் , உன்னை வணங்க வருகின்ற வானவர்களின் மணிமுடிகளிலுள்ள (மாணிக்கம் , ரத்தினம் போன்றவை ) சாணைக்கற்களால் தீட்டப்பட்டு இரும்பு கூர் போல் இருக்கிறது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*12 தினங்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து மது குடபாயசம் நிவேதனம் செய்தால் கஜ, துரங்க சைந்ய ஸ்தம்பனம் ஏற்படும்.*

**84.** *பரகாய பிரவேசனம்*

श्रुतीनांमूर्धानोदधतितवयौशेखरतया

ममाप्येतौमातःशिरसिदययाधेहिचरणौ|

ययोःपाद्यंपाथःपशुपतिजटाजूटतटिनी

ययोर्लाक्षालक्ष्मीररुणहरिचूडामणिरुचिः||८४||

*ச்ருதீனாம் மூர்தானோ தததி தவ யௌ சேகரதயா*

*மமாப்யேதௌ மாத: சிரஸி தயயா தே: சரணௌ |*

*யயோ: பாத்யம் பாத: பசுபதி ஜடாஜூட தடினீ*

*யயோர் லாக்ஷா-லக்ஷ்மீ-ரருண ஹரிசூடாமணி ருசி: || 84 ||*

*தாயே ! எந்த சரணங்களை வேதங்களின் சிகரமான உபநிடதங்கள் , தன் தலையில் மலராக சூடிக்கொள்கின்றனவோ , எந்த சரணங்கள் பரமசிவனது சடைமுடியிலுள்ள புனித கங்கை நீரால் நீராட்டப்படுகிறதோ , எந்த சரணங்களில் பூசியிருக்கும் மருதாணியின் பொலிவானது, வணங்க வரும் விஷ்ணுவின் சூடாமணியின் பொலிவினால் ஏற்படுகிறதோ , அந்தப் புனித மலரடியை என் தலைமீதும் வைப்பாயாக !*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*ஒரு வருட காலத்திற்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன், சித்ரான்னம், க்ஷீரபாயசம் நிவேதனம் செய்தால் பரகாய பிரவேசனம் கிட்டும் .*

**85. பூதமாரண பிசாச நிவ்ருத்தி**

नमोवाकंब्रूमोनयनरमणीयायपदयो-

स्तवास्मैद्वन्द्वायस्फुटरुचिरसालक्तकवते|

असूयत्यत्यन्तंयदभिहननायस्पृहयते

पशूनामीशानःप्रमदवनकङ्केलितरवे||८५||

நமோ வாகம் ப்ரூமோ நயன-ரமணீயாய பதயோ:

தவாஸ்மை த்வன்த்வாய ஸ்புட-ருசி ரஸாலக்தகவதே |

அஸூயத்யத்யந்தம் யதபிஹனனாய ஸ்ப்ருஹயதே

பசூனாமீசான: ப்ரமதவன-கங்கேலிதரவே || 85 ||

தாயே ! மருதாணியுடன் கூடிய உன் பாதங்கள் எங்களுக்கு இனிமையானவை , மேன்மைகளைத் தருபவை . இந்த பாதங்களினால் உதைபட வேண்டும் என்று ஆசைப்படும் நந்தவனத்து அசோக மரத்தைக் கண்டு , சிவனும் பொறாமை அடைகிறார் . அந்த புனித பாத கமலங்களை நான் வணங்குகிறேன் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

12 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன், பால் பாயசம் நிவேதனம் செய்தால் பூதமாரண பிசாச நிவ்ருத்தி கிடைக்கும்.

**86. சகல பிசாச பய நிவ்ருத்தி**

मृषाकृत्वागोत्रस्खलनमथवैलक्ष्यनमितं

ललाटेभर्तारंचरणकमलेताडयतिते|

चिरादन्तःशल्यंदहनकृतमुन्मूलितवता

तुलाकोटिक्वाणैःकिलिकिलितमीशानरिपुणा||८६||

ம்ருஷா க்ருத்வா கோத்ரஸ்கலன-மத வைலக்ஷ்யனமிதம்

லலாடே பர்தாரம் சரணகமலே தாடயதி தே |

சிராதந்த: சல்யம் தஹனக்ருத முன்மூலிதவதா

துலாகோடிக்வாணை: கிலிகிலித மீசான ரிபுணா || 86 ||

தாயே ! உன் தங்கத் திருவடிகள் தன்மீது படவேண்டும் என்று , உன் கணவனாகிய சிவன் , உன்னை வேறு ஒரு பெண்ணின் பெயரைச் சொல்லி அழைக்க , அதனால் உனக்கு ஏற்பட்ட கோபத்தைத் தணிக்க , என்னசெய்வது என்று தெரியாமல் , அவர் உன்னை வணங்கும் போது , உன் பாதகமலமானது அவர் தலைமீது பட , அப்பொழுது எழுந்த உன் கால் தண்டை ஒலி ஓசைதனைக் கேட்ட மன்மதன் , தன்னை எரித்த சிவனிடம் உண்டான பகைதனையும் மறந்து தானே வெற்றி பெற்றதாக முரசு கொட்டுவது போல் தோன்றுகிறது .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

21 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து க்ஷீரபாயசம், தேங்காய்,வாழைபழம் நிவேதனம் செய்தால் பிசாச பய நிவ்ருத்தி கிடைக்கும்.

**87. *சர்வப்ரேரணம்***

हिमानीहन्तव्यंहिमगिरिनिवासैकचतुरौ

निशायांनिद्राणंनिशिचरमभागेचविशदौ|

वरंलक्ष्मीपात्रंश्रियमतिसृजन्तौसमयिनां

सरोजंत्वत्पादौजननिजयतश्चित्रमिहकिम्||८७||

*ஹிமானீ ஹந்தவ்யம் :மகிரினிவாஸைக-சதுரௌ*

*நிசாயாம் நித்ராணம் நிசி-சரமபாகே ச விசதௌ |*

*வரம் லக்ஷ்மீபாத்ரம் ச்ரிய-மதிஸ்ருஹந்தோ ஸமயினாம்*

*ஸரோஜம் த்வத்பாதௌ ஜனனி ஜயத: சித்ரமிஹ கிம் || 87 ||*

*அம்மா ! பனிமலையில் இருக்கும் உன் பாத கமலம் , இரவு , பகல் , சந்தியா காலம் ஆகிய எந்நேரமும் மலர்ந்து இருக்கக் கூடியவை . உன்னையே நினைத்து தியானிக்கும் அடியவர்க்கு அழியாத செல்வம் தரக்கூடியது . திருமகளான லக்ஷ்மி வாழ்கின்ற தாமரையானது , பனியால் உதிர்கின்றது , இரவில் மூடிக்கொள்கிறது . இந்தத் தாமரையை விட உன் பாத தாமரை மிகவும் உயர்வுடையது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*16 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து க்ஷீரபாயசம், தேங்காய், பழம் நிவேதனம் செய்தால் சர்வப்ரேரணம் அமையும்.*

**88. ம்ருக கர்ஷனம்**

पदंतेकीर्तीनांप्रपदमपदंदेविविपदां

कथंनीतंसद्भिःकठिनकमठीकर्परतुलाम्|

कथंवाबाहुभ्यामुपयमनकालेपुरभिदा

यदादायन्यस्तंदृषदिदयमानेनमनसा||८८||

*பதம் தே கீர்தீனாம் ப்ரபதமபதம் தேவி விபதாம்*

*கதம் நீதம் ஸத்பி: கடின-கமட-கர்பர-துலாம்* |

*கதம் வா பாஹுப்யாமுபயமனகாலே புரபிதா*

*யதாதாய ந்யஸ்தம் த்ருஷதி தயமானேன மனஸா* || 88 ||

*தாயே ! பக்தர்களுக்கு உயர்வை கொடுக்கக் கூடியதும் , அவர்களது துன்பங்களைப் போக்கக்கூடியதுமான , பெருமையுடைய உன் மென்மையான பாத நுனியைப் பிடித்து , சிவனும் அளவற்ற ஆசையுடன் திருமண நாளன்று , எப்படித்தான் கடினமான கருங்கல் அம்மி மீது வைத்தாரோ ? கவிகளும் இந்த மென்மையான பாதங்களின் மேல்பாகத்தை , ஆமை முதுகு ஓட்டிற்கு உவமையாகக் எப்படித்தான் கூறினாரோ ?*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

*ஆறு மாதத்திற்கு தினமும்* 1000 *முறை பாராயணம் செய்து க்ஷீரபாயசம், தேங்காய், பழம் நிவேதனம் செய்தால் ம்ருக கர்ஷனம் பலன் கிடைக்கும்.*

**89. சகல ரோக நிவ்ருத்தி**

नखैर्नाकस्त्रीणांकरकमलसंकोचशशिभि-

स्तरूणांदिव्यानांहसतइवतेचण्डिचरणौ|

फलानिस्वःस्थेभ्यःकिसलयकराग्रेणददतां

दरिद्रेभ्योभद्रांश्रियमनिशमह्नायददतौ||८९||

நகைர் நாகஸ்த்ரீணாம் கரகமல-ஸம்கோச-சசிபி:

தரூணாம் திவ்யானாம் ஹஸத இவ தே சண்டி சரணௌ |

பலானி ஸ்வ:ஸ்தேப்ய: கிஸலய-கராக்ரேண தததாம்

தரித்ரேப்யோ பத்ராம் ச்ரியமனிசமஹ்னாய தததௌ || 89 ||

தாயே ! தேவலோகத்தில் உள்ள கற்பகமரங்கள் இலைகளாகிய தன கரங்களால் , வானவர்களுக்கு அவர்கள் விரும்பியதைத் தருகின்றன . ஆனால் நீயோ உன்பாதங்களால் வானவர்களுக்கும் , ஏழை தரித்திரர்களுக்கும் எப்பொழுதும் சீக்கிரத்தில் செல்வத்தை வாரி , வாரி வழங்குகின்றாய் . வானுலக கற்பகமரங்கள் கைகளால் தருவதை, நீயோ கால்களால் தந்து, அவைகளை ஏளனம் செய்கிறாய் . தேலோகத்துப் பெண்களின் தாமரை போன்ற கைகளை மூடி வணங்கச் செய்கின்ற , சந்திரனைப்போல் ஒளி உடைய உன் பாத அழகினைச் சொல்ல வார்த்தைகள் ஏது ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

30 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து குடபாயசம், தேன் நிவேதனம் செய்தால் சகல ரோகதிலிருந்து நிவ்ருத்தி கிடைக்கும்.

**90. சர்வ க்ஷுத்ர பிரயோகம்**

ददानेदीनेभ्यःश्रियमनिशमाशानुसदृशी-

ममन्दंसौन्दर्यप्रकरमकरन्दम्विकिरति|

तवास्मिन्मन्दारस्तबकसुभगेयातुचरणे

निमज्जन्मज्जीवःकरणचरणःषट्चरणताम्||९०||

*ததானே தீனேப்ய: ச்ரியமனிசமாசானுஸத்ருசீம்*

*அமந்தம் ஸௌந்தர்யம் ப்ரகர-மகரந்தம் விகிரதி |*

*தவாஸ்மின் மந்தார-ஸ்தபக-ஸுபகே யாது சரணே*

*நிமஜ்ஜன் மஜ்ஜீவ: கரணசரண: ஷட்சரணதாம் || 90 ||*

தேவீ ! உன் பாதங்கள் ஏழைகளுக்கு அவர்கள் விரும்பும் அளவிற்கு செல்வத்தைக் கொடுக்கிறது .வெள்ளம் போன்று தேனைப் பெருகச் செய்கின்றது . கற்பகமரப் பூங்கொத்து போல் அழகானவை . இந்த அழகிய உன் பாத கமலத்தில் ஆறு கால்களைக் கொண்ட , தேனைப் பருகும் வண்டாக இருக்கும் பாக்யத்தை என் ஆன்மாவானது அடையட்டும் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

30 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து பாயசம், தேன் நிவேதனம் செய்தால் சர்வ க்ஷுத்ர பிரயோக நிவ்ருத்தி கிடைக்கும்.

**91. *தன லாபம்***

पदन्यासक्रीडापरिचयमिवारब्धुमनसः

स्खलन्तस्तेखेलंभवनकलहंसानजहति|

अतस्तेषांशिक्षांसुभगमणिमञ्जीररणित-

च्छलादाचक्षाणंचरणकमलंचारुचरिते||९१||

*பதந்யாஸ-க்ரீடா பரிசயமிவாரப்து-மனஸ:*

ஸ்கலந்தஸ்தே கேலம் பவனகலஹம்ஸா ந ஜஹதி |

*அதஸ்தேஷாம் சிக்ஷாம் ஸுபகமணி-மஞ்ஜீர-ரணித-*

*ச்சலாதாசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே* || 91 ||

*தாயே ! உன்னுடைய அழகான நடையினைப் பார்த்து , தானும் அதைக் கற்றுக்கொள்ள நினைத்து , உன் வீட்டிலுள்ள அன்னப்பட்சிகள் , துள்ளித் துள்ளி நடந்து , உன் அழகு நடையைப் பின்பற்றி , உன்னைப்போல் தானும் நடக்க பழக்கப்படுத்திக் கொள்கின்றன . நீ நடக்கும்பொழுது உன் தண்டையிலுள்ள பத்மராகக் கற்கள் எழுப்பும் ஓசையானது , அந்த அன்னப்பட்சிகளுக்கு மறைமுகமாக நடப்பதற்குப் பாடம் சொல்லித்தருவது போல் உள்ளது .*

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

25 நாட்களுக்கு தினமும் 2000 முறை பாராயணம் செய்து உத்தம நிவேதனம் செய்தால் தன லாபம் மற்றும் பூமி லாபம் கிடைக்கும்.

**92. *ராஜ்ய ப்ராப்தி***

गतास्तेमञ्चत्वंद्रुहिणहरिरुद्रेश्वरभृतः

शिवःस्वच्छच्छायाघटितकपटप्रच्छदपटः|

त्वदीयानांभासांप्रतिफलनरागारुणतया

शरीरीशृङ्गारोरसइवदृशांदोग्धिकुतुकम्||९२||

*கதாஸ்தே மஞ்சத்வம் த்ரு:ண ஹரி ருத்ரேச்வர ப்ருத:*

*சிவ: ஸ்வச்ச-ச்சாயா-கடித-கபட-ப்ரச்சதபட: |*

*த்வதீயானாம் பாஸாம் ப்ரதிபலன ராகாருணதயா*

*சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம் || 92 ||*

*அம்மா ! உலகாளும் பிரம்மா ,விஷ்ணு , ருத்ரன் , ஈசன் இந்நால்வரும் உனக்கு எப்போதும் பணிபுரிவதற்காக , உன் கட்டிலின் நான்கு கால்களாக ஆகி , உன்னை எப்போதும் வணங்குகின்றனர் . உன் கட்டிலின் மேல் விரிப்பாக இருக்கும் சதாசிவன் வெண்மையான ஆடைதனைக் கூடியவராக இருந்தாலும் , உன்னுடைய சிவந்த ஒளியின் பிரதிபலிப்பால் அவரும் சிவப்பாகமாரி ஸ்ருங்காரரசம் உருவெடுத்தாற்போல் ஆகி , உன் கண்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றார்.*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

30 *நாட்களுக்கு தினமும்* 4000 *முறை பாராயணம் செய்து சித்ரான்னம் நிவேதனம் செய்தால் ராஜ்ய ப்ராப்தி கிடைக்கும்.*

**93. சர்வ மனோரத ப்ரதம்**

अरालाकेशेषुप्रकृतिसरलामन्दहसिते

शिरीषाभाचित्तेदृषदुपलशोभाकुचतटे|

भृशंतन्वीमध्येपृथुरुरसिजारोहविषये

जगत्त्रातुंशम्भोर्जयतिकरुणाकाचिदरुणा||९३||

அராலா கேகசேஷு ப்ரக்ருதி ஸரலா மன்தஹஸிதே

சிரீஷாபா சித்தே த்ருஷதுபலசோபா குசதடே |

ப்ருசம் தன்வீ மத்யே ப்ருது-ருரஸிஜாரோஹ விஷயே

ஜகத்த்ராதும் சம்போர் ஜயதி கருணா காசிதருணா || 93 ||

தாயே ! மனம் , வாக்குக்கு எட்டாதவளே ! இயற்கையில் சுருண்டமுடியும் , இனிமையான புன்னகையும் , வாகைமலரைப் போல் மிருதுவான மனமும் , ரத்தினக்கற்கள் போல் கடினமான ஸ்தனமும் , மெலிந்த இடையும் , பருத்த பின்பாகமும் , மயக்கம் தரும் அழகிய உதடும் , உடல் முழுவதும் சிவந்த அழகுடனும் கூடிய நீயே , சிவனின் கனிவு சக்தியான அருணாதேவியாக இந்த உலகம் முழுவதையும் காக்கின்றாய் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

25 நாட்களுக்கு தினமும் 2000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் சர்வ மனோரத ப்ரதம் கிடைக்கும்.

## 94. இஷ்ட ப்ராப்தி

कलङ्कःकस्तूरीरजनिकरबिम्बंजलमयं

कलाभिःकर्पूरैर्मरकतकरण्डंनिबिडितम्|

अतस्त्वद्भोगेनप्रतिदिनमिदंरिक्तकुहरं

विधिर्भूयोभूयोनिबिडयतिनूनंतवकृते||९४||

*கலங்க: கஸ்தூரீ ரஜனிகர பிம்பம் ஜலமயம்*

*கலாபி: கர்பூரைர் மரகதகரண்டம் நிபிடிதம் |*

*அதஸ்த்வத்போகேன ப்ரதிதினமிதம் ரிக்தகுஹரம்*

*விதிர் பூயோ பூயோ நிபிடயதி நூநம் தவ க்ருதே || 94 ||*

*அம்மா ! மரகதத்தினால் செய்யப்பட்ட பெரிய பாத்திரமான சந்திரமண்டலத்தில் நீராடுபவளே ! சந்திரனின் நடுவில் உள்ள களங்கமே கஸ்தூரி பொடியாகவும் , சந்திரனே பன்னீராகவும் , சந்திரகிரணங்களே பச்சைக் கற்பூரப்பொடியாகவும் , உனக்கு நீராடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது . தினமும் நீ நீராடியபின் காலியான இவைகளை , பிரம்மாவானவர் மீண்டும், மீண்டும் இவைகளை வாசனைப் பொருள்களால் நிரப்பி வைக்கிறார் .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 நாட்களுக்கு தினமும் 2000 முறை பாராயணம் செய்து முத்கான்னம், பழம் நிவேதனம் செய்தால் சர்வ இஷ்ட ப்ராப்தி கிடைக்கும்.

**95. *ரண நிவாரணம்***

पुरारातेरन्तःपुरमसिततस्त्वच्चरणयोः

सपर्यामर्यादातरलकरणानामसुलभा|

तथाह्येतेनीताःशतमखमुखाःसिद्धिमतुलां

तवद्वारोपान्तस्थितिभिरणिमाद्याभिरमराः||९५||

*புராரந்தே-ரந்த: புரமஸி ததஸ்த்வச் சரணயோ:*

*ஸபர்யா-மர்யாதா தரலகரணானா-மஸுலபா |*

*ததா ஹ்யேதே நீதா: சதமகமுகா: ஸித்திமதுலாம்*

*தவ த்வாரோபாந்த: ஸ்திதிபி-ரணிமாத்யாபி-ரமரா: || 95 ||*

*அம்மா ! மூ உலகமும் எரித்த பரமசிவனின் பட்டத்துராணியே ! புலன்களை அடக்கமுடியாத சபலபுத்தி உடையவர்களுக்கு , உன் பாதம் அருகில் வரவோ , பூஜை செய்யவோ தகுதி கிடையாது . அதனால்தான் இந்திரன் போன்ற தேவர்களுக்கு , அந்த பாக்கியம் கிடைக்காமல் , உன் வாசலில் காவல் புரியும் அணிமாதி சித்திகளுக்குச் சமமான நிலையை உடையவர்களாய் உன் வாசலிலேயே இருக்கும்படி நேரிடுகிறது .*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

45 *நாட்களுக்கு தினமும்* 108 *முறை பாராயணம் செய்து திலான்னம், சர்க்கரை நிவேதனம் செய்தால் சர்வ ரண நிவாரணம் கிடைக்கும்.*

**96. சித்ரப்ரதம்**

कलत्रंवैधात्रंकतिकतिभजन्तेनकवयः

श्रियोदेव्याःकोवानभवतिपतिःकैरपिधनैः|

महादेवंहित्वातवसतिसतीनामचरमे

कुचाभ्यामासङ्गःकुरवकतरोरप्यसुलभः||९६||

கலத்ரம் வைதாத்ரம் கதிகதி பஜந்தே ந கவய:

ச்ரியோ தேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை: |

மஹாதேவம் :த்வா தவ ஸதி ஸதீனா-மசரமே

குசப்யாமாஸங்க: குரவகதரோ ரப்யஸுலப: || 96 ||

தாயே ! கற்புக்கரிசியே ! பிரும்மாவின் மனைவியான சரஸ்வதியை எத்தனை கவிகள்தான் அடையவில்லை ? அதுபோல் கொஞ்சம் செல்வம் பெற்றவன் கூட லக்ஷ்மிபதியாக ஆகவில்லையோ ? ஆனால் உன்னை அப்படிச் சொல்லமுடியுமோ ? உன் ஆலிங்கனமானது , உன் கணவனான சிவனைத் தவிர குரவக மரத்திற்கும் கிடையாதே ? அப்படியானால் நீதானே பதிவ்ருதா மங்கையர் திலகம் ?

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

45 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து க்ஷீரபாயசம் ,தேன் நிவேதனம் செய்தால் சித்ரப்ரதம் கிடைக்கும்.

**97. வாக்சித்தி**

गिरामाहुर्देवींद्रुहिणगृहिणीमागमविदो

हरेःपत्नींपद्मांहरसहचरीमद्रितनयाम्|

तुरीयाकापित्वंदुरधिगमनिःसीममहिमा

महामायाविश्वंभ्रमयसिपरब्रह्ममहिषि||९७||

*கிராமாஹுர் தேவீம் த்ரு:ணக்ரு:ணீமாகமவிதோ*

*ஹரே: பத்னீம் பத்மாம் ஹரஸஹசரீ-மத்ரிதனயாம் |*

*துரீயா காபி த்வம் துரதிகமனிஸ் ஸீம-ம:மா*

*மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மம:ஷி || 97 ||*

*தாயே ! வேத இரகசியங்கள் அறிந்தவர்கள் , நீயே பிரம்மாவின் மனைவி சரஸ்வதி என்றும் , விஷ்ணுவின் மனைவி லக்ஷ்மி என்றும் , சிவனின் துணைவி பார்வதி என்றும் கூறுகின்றனர் . அனால் நீயோ இன்னதென்று வருணிக்க முடியாததும் , அடைய முடியாததும் , எல்லையற்ற மகிமையுடன் கூடிய மஹாமாயா உருவினளாகி இந்த உலகம் முழுவதையும் திகைக்கவைக்கின்றாய் !*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

8 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து திவ்யான்னம் ,தேன் நிவேதனம் செய்தால் வாக்சித்தி மற்றும் பலகாயவ்ருத்தி கிடைக்கும்.

**98. புத்ரப்ராப்தி**

कदाकालेमातःकथयकलितालक्तकरसं

पिबेयंविद्यार्थीतवचरणनिर्णेजनजलम्|

प्रकृत्यामूकानामपिचकविताकारणतया

कदाधत्तेवाणीमुखकमलताम्बूलरसताम्||९८||

*கதா காலே மாத: கதய கலிதாலக்தகரஸம்*

*பிபேயம் வித்யார்தீ தவ சரண நிர்ணேஜனஜலம் |*

*ப்ரக்ருத்யா மூகானாமபி ச கவிதாகாரணதயா*

*கதா தத்தே வாணீமுககமல-தாம்பூல-ரஸதாம் || 98 ||*

*அம்மா ! பிறவியிலேயே ஊமையாய் இருப்பவனுக்கும் கூட , கவிதைகள் பாடும் திறமையைக் கொடுக்கக் கூடிய சரஸ்வதியின் சக்தியுடைய தாம்பூலரசத்திற்குச் சமமானதான , மருதாணி பூசிய உன் பாதங்களை அலம்பிய ( தாம்பூலரசம் போல் சிவந்த ) நீரானது , ஞானத்தை அடைய விரும்பும் எனக்கு எப்போது கிடைக்குமோ ?*

***பாராயண முறை மற்றும் பலன்கள்:***

30 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து தேன் நிவேதனம் செய்தால் பெண்களுக்கு கர்பப்ராப்தியும் ஆண்களுக்கு போகப்ராப்தியும் கிடைக்கும்.

**99. சௌக்கியம்**

सरस्वत्यालक्ष्म्याविधिहरिसपत्नोविहरते

रतेःपातिव्रत्यंशिथिलयतिरम्येणवपुषा|

चिरंजीवन्नेवक्षपितपशुपाशव्यतिकरः

परानन्दाभिख्यम्रसयतिरसंत्वद्भजनवान्||९९||

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதி ஹரி ஸபத்னோ விஹரதே

ரதே: பதிவ்ரத்யம் சிதிலபதி ரம்யேண வபுஷா |

சிரம் ஜீவன்னேவ க்ஷபித-பசுபாச-வ்யதிகர:

பரானன்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்பஜனவான் || 99 ||

தாயே ! உன்னை வணங்கி துதிப்பவனிடத்தில் சரஸ்வதி இருப்பதால் அவன் பிரம்மாவிற்கு எதிரியாகவும் , லக்ஷ்மிகடாக்ஷம் இருப்பதால் அவன் விஷ்ணுவிற்கு எதிரியாகவும் , மன்மதனின் மனைவி ரதி தேவியின் கற்ப்பிற்கு தளர்ச்சி ஏற்ப்படுத்துவனாகவும் , அறிவு ,அழகு , செல்வம் ஆகிய இவைகள் உடையவனாய்,உயிர் , உடல் , மாயை என்ற பந்தங்களிலிருந்து விடுபட்டு , என்றும் நிலையான பரமானந்த சுகத்தை அடைகிறான் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

15 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து மாஷாபூபம், தேன் மற்றும் முத்கான்னம் நிவேதனம் செய்தால் சகல சௌகியமும் சௌகரியமும் கிடைக்கும்.

**100. சகல சித்தி**

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधिः

सुधासूतेश्चन्द्रोपलजललवैरर्घ्यरचना|

स्वकीयैरम्भोभिःसलिलनिधिसौहित्यकरणं

त्वदीयाभिर्वाग्भिस्तवजननिवाचांस्तुतिरियम्||१००||

*ப்ரதீப ஜ்வாலாபிர் திவஸகர நீராஜனவிதி:*

*ஸுதாஸூதே: சசந்த்ரோபல-ஜலலவை-ரக்யரசனா |*

*ஸ்வகீயைரம்போபி: ஸலில-நிதி-ஸௌ:த்யகரணம்*

*த்வதீயாபிர் வாக்பிஸ் தவ ஜனனி வாசாம் ஸ்துதிரியம் || 100 ||*

தேவீ ! லோகநாயகி ! கைத்தீவட்டி ஒளியினால் கதிரவனுக்கு ஆரத்தி செய்வது போலவும் , சந்திரகாந்தக் கல்லிலிருந்து பெருகுகின்ற நீராலேயே , அமிர்தத்தை வாரி , வாரிப் பொழியும் சந்திரனுக்கு அர்க்கியம் தருவது போலவும் , கடல் நீராலேயே கடல் அரசனுக்கு தர்ப்பணம் முதலியன செய்வது போலவும் , உன்னுடைய வாய்மொழியால் இயற்றப்பட்ட இந்த துதி மொழியினாலேயே உன்னை நான் துதிக்கிறேன் .

**பாராயண முறை மற்றும் பலன்கள்:**

16 நாட்களுக்கு தினமும் 1000 முறை பாராயணம் செய்து த்ரிமதுரம், ஜம்பூபலம் நிவேதனம் செய்தால் சகல சித்தி கிடைக்கும்.

सौन्दर्य लहरी मुख्य स्तोत्रम् सम्वार्तदायकम्।

भगवद्पाद सन्क्लुप्तम् पठेन् मुक्तौ भवेन्नरः॥

ஸௌந்தயலஹரி முக்யஸ்தோத்ரம் ஸம்வார்ததாயகம் |

பகவத்பாத ஸந்க்லுப்தம் படேன் முக்தௌ பவேந் நர: ||

இந்த சௌந்தர்யலஹரி ஸ்லோகத்தை முழு மனதுடன் படிப்பவர்களுக்கும் , கேட்பவர்களுக்கும் எல்லா வித நன்மைகளும் உண்டாக வேண்டும் என்று அன்னையை வேண்டுகிறேன் .

सौन्दर्य लहरीस्तोत्रम्सम्पूर्णम्॥

ஸௌந்தர்யலஹரி ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.